ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



நவம்பர் 1981

கார்த்திகை

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பர்ய மாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப் பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

பிரார்த்தனைக்கூடத்தின் திருப்பணி

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சந்நிதிக்குக் கீழே பிரார்த்தனைக் கூடம் அமைந்துள்ளது. இந்தப் பிரார்த்தனைக்கூடம், சுவாமி பிரம்மானந்தர் மற்றும் பல பெரியோர்களின் புனித நினைவுகளுடன் தொடர்புகொண்டதும் பழமையானதும் ஆகும்.

இந்தப் பிரார்த்தனைக்கூடம் கட்டப்பட்டு 65 ஆண்டுகள் ஆகின்றன. இதனைச் சில ஆண்டுகளுக்கு முன்பே பழுது பார்த்திருக்க வேண்டும்.

இப்போது பிரார்த்தனைக் கூடத்தின் திருப்பணியை மேற்கொண்டுள்ளோம். இத் திருப்பணி திட்டமிட்டுள்ளபடி நிறைவுபெற ஒரு லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமடத்தின் பக்தர்களையும் அன்பர்களையும் பிரார்த்தனைக் கூடத்தின் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்கி இந்தப் புனிதப் பணியில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்குச் சலுகை உண்டு.

சுவாமி தபஸ்யானந்தர்,
தலைவர்

எங்கள் தமிழ் நூல்கள் வெளியீடு

I. ஸ்ரீ ராமகிருஷ்ணர்

	ரூ.	பை.
ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சீடர்களும்	11	00
ஸ்ரீ ராமகிருஷ்ணரது திவ்விய சரிதப் பாடல்	4	00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	3	00
ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம் (முதல் பாகம்)	8	00
,, (இரண்டாவது பாகம்)	8	00
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	15	00
ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷதம்	4	00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்	4	00
குருதேவர் வாக்கியம்	1	25
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கதை	0	35
ஸ்ரீ ராமகிருஷ்ணர் (மூவண்ணப் படங்களுடன்)	4	00

II. ஸ்ரீ சாரதாதேவியார்

	ரூ.	பை.
ஸ்ரீ சாரதாதேவியார் அவரது வரலாறும் திருவாக்கும்	10	00
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	3	00
தூய அன்னையார் ஸ்ரீ சாரதாமணி தேவியார்	1	25

III. சுவாமி விவேகானந்தர்

	ரூ.	பை.
விவேகானந்தரின் அறிவுரைகள்	1	00
சுவாமி விவேகானந்தர் (ரா. கணபதி) அட்டை பைண்டு	12	00
ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்	4	00
சிறுவர்களது விவேகானந்தர்	2	00
விவேகானந்தர் (மூவர்ணப் படங்களுடன்)	2	50
சுவாமி விவேகானந்தரின் சம்பாஷணைகள்	6	00
,, ,, காலிகோ	7	00
இந்தியப் பிரசங்கங்கள்	10	00
இந்தியப் பிரசங்கங்கள் (காலிகோ)	15	00
புதிய இந்தியாவைப் படைப்போம்	1	00
கர்மயோகம்	6	00
பக்தியோகம்	1	50
இராஜயோக உரைகள்	2	50
நமது தாய்நாடு	2	00
நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை	1	00
கல்வி	2	50
பாரதப் பெண்மணிகள்	2	50
தற்கால இந்தியா	1	00
சிகாகோ பிரசங்கம்	1	00
எனது வாழ்வும் பணியும்	0	85
எனது போர்முறை	0	75
எனது குருநாதர்	1	50
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	60
விவேகானந்தர் பாதையிலே	1	00

IV. இதர நூல்கள்

	ரூ.	பை.
ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3	00
சுவாமி ராமகிருஷ்ணானந்தர்	3	50
மகான் துர்க்காசரண நாகர்	1	50
திரு அருள் மொழி	6	00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3	00
இந்து மத ஸாரம்	3	00
பக்தி மார்க்கம்	2	00
அருள்நெறிக் கதைகள்	5	00
பக்திக் கதைகள் (அச்சில்)		
ஆன்மிகக் கதைகள் (அச்சில்)		
நாரதர் கலகம்	4	75
அத்யாத்ம ராமாயணம் (அச்சில்)		
கடோபநிஷதம் (நாடகம்)	2	00
ப்ரச்னோபநிஷதம் (நாடகம்)	2	00
பஜனாவளி	11	00
ஆத்ம நிவேதனம் (அச்சில்)		
நடராஜ வடிவம்	0	35
ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம்	0	20
ஆராத்ரிகம்	0	20
ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும் சங்கமும்	2	00

V. முரசு நூல்கள் (பாக்கெட் சைஸ்)

	ரூ.	பை.
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞானமுரசு	0	80
ஸ்ரீ சாரதாதேவியாரின் அன்பு முரசு	0	80
ஸ்ரீ விவேகானந்தரின் வீர முரசு	1	00
ஸ்ரீ கிருஷ்ணரின் யோக முரசு	0	80
ஸ்ரீராமபிரானின் தர்ம முரசு	1	00
ஸ்ரீ சங்கரரின் வேதாந்த முரசு	1	00
புத்தரின் அறமுரசு	0	80

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்களுக்கு சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் எல்லா வெளியீடுகளின் மீது 5% கழிவு தரப்படும். நூல்களை அனுப்புமாறு எழுதும் கடிதங்களில் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்ணையும் கழிவு நீக்கி நூல்களை விற்பனைக்குப் பெற விரும்புவதையும் குறிப்பிடக் கோருகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்: சுடர்கள் 1-10

சுவாமி விவேகானந்தர் பேசியவை, எழுதியவை—அனைத்தும் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அவற்றுள் 1, 4, 6, 7, 9 ஆகிய ஐந்து தொகுதிகளும் கைவசம் இல்லை. ஏனைய ஐந்து தொகுதிகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பகுதியும் 500 பக்கங்களுக்குக் குறையாதது.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61 | நவம்பர்—1981 | இதழ் 11

பொருளடக்கம்

ஆசிரியர் 'அண்ணு' உரை எழுதிய எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை, பொழிப்புரைகளும்
விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன.

I. உபநிஷதங்கள்	ரூ	பை
ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	5	00
தைத்திரிய உபநிஷத்து (பக்கம் 91)	3	00
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம் ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்ருவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹா நாராயண உபநிஷத்து (தைத்திரிய நாராயணவல்லி) பக்கம் 146	5	00
II. பகவத்கீதை		
ஸ்ரீமத் பகவத்கீதை	14	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	3	00
III. வேதநூல்களும் பிரயோகங்களும்		
விவேகசூடாமணி	14	00
ஸ்ரீருத்ரம்-சமகம் (மஹந்யாஸத் துடன் -பக்கம் 296)	7	00
காலிகோ	10	00
தைத்திரிய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	8	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	4	00
ஷை இரண்டாம் பாகம்	4	50
தேவி பாகவத ஸாரம் முதல் பாகம் சாதா பைண்டு	15	00
அட்டை ,,	20	00
தேவி பாகவதசாரம் இரண்டாம்பாகம்	18	00
அட்டை பைண்டு	23	00
தேவி பாகவதசாரம் மூன்ரும் பாகம் சாதா பைண்டு	18	00
,, ,, காலிகோ	23	00
ஸ்ரீ தேவி மாகாத்மியம்	9	00
,, ,, அட்டை பைண்டு	12	00
தேவி மாஹாத்மியம் (மூலம்)	5	00
தேவி ஸ்தோத்ரங்கள்	2	50

	ரூ.	பை.
உபநயனம்	3	00
,, காலிகோ	5	00
குருகீதை	3	25
நாரத பக்தி சூத்திரங்கள்	1	75
,, காலிகோ	3	00
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	3	00
,, (நாகரம்-தமிழ்)	4	50
தேவிஸூக்தங்களும் உபநிஷதங்களும்	2	50
புருஷஸூக்தம்	3	00
பூஜாவிதானம் (தமிழ்)	8	00
ஹோமவிதானம்	11	00
IV. ஸ்தோத்ரங்கள்		
ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) (நாகரம்-தமிழ்)	1	50
சிவானந்தலஹரீ பாஷ்யம் (அச்சில்)		
,, (மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	6	00
,, ,, மூலம்	2	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	7	00
,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது)	3	00
ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
,, அட்டை பைண்டு	4	00
ஆதித்ய ஹ்ருதயம்	1	25
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	1	00
வரலக்ஷ்மி விரதம்	1	00
ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்	12	00

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

கடந்த 61 ஆண்டுகளாக தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் எங்கள் மாத பத்திரிகை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளை புகட்டுகிறது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம் : ஆண்டுச் சந்தா ரூ. 12/- ஆயுள் சந்தா ரூ. 150/-

ஸ்ரீராமகிருஷ்ண மடம் :: மயிலாப்பூர், சென்னை-600 004.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை.
—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஞூ கார்த்திகை மீ	இதழ் : 11




वन्देऽहं सर्वदा देवीं भारतीं चिद्रसात्मिकाम् ।
अन्तर्मुखसमाराध्यां मातृकां परदेवताम् ॥

வந்தேஹம் ஸர்வதா தேவீம் பாரதீம் சித்ரஸாத்மிகாம் ।
அந்தர்முகஸமாராத்யாம் மாத்ருகாம் பரதேவதாம் ॥

வண்ண எழுத்துக்களாக உருவம் கொண்டவளும், உள்நெஞ்சினுல் வழிபட்டுப் பெறத்தக்கவளும், ஒலிவடிவத்தில் மந்திரசக்தியாக விளங்குகிறவளும், பேச்சில் வெளிப்பட்டு, 'பாரதி' என்ற பெயர் கொண்டவளும், பரதேவதையுமான வித்யாதேவியை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

சற்போத சித்கனமாம் சொரூபம் போற்றி,
சலனமிலாச் சாந்தபர சொரூபம் போற்றி,
தற்போத சூனியமாம் சொரூபம் போற்றி,
தன்மயமாய்த் தனித்தபர சொரூபம் போற்றி,
கற்போல நிச்சலமாம் சொரூபம் போற்றி,
களங்கமிலா நிஷ்களமாம் சொரூபம் போற்றி,
எப்போதும் இருமையிலாச் சொரூபம் போற்றி,
ஏகமதாம் பரப்பிரம்ம சொரூபம் போற்றி.

—ஒரு சாது



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

வெள்ளிக்கிழமை, டிசம்பர் 14, 1883

பிற்பகல் சுமார் மூன்றரை மணி இருக்கும். அப்போது ம— குருதேவரின் அறைக்கு மீண்டும் வந்து அமர்ந்தார். புரோப்டன் என்ற பள்ளியிலிருந்து சில மாணவர்களை அழைத்துக்கொண்டு ஒருவர் குருதேவரைத் தரிசிக்க வந்திருந்தார். குருதேவர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். இடையிடையே அந்த ஆசிரியர் மாணவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார். விக்கிரக வழிபாட்டைக் குறித்து அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (அந்த ஆசிரியரிடம்): விக்கிரக வழிபாடு செய்வதில் என்ன தவறு இருக்கிறது? எங்கே ஸத் சித் ஆனந்தம் (அஸ்தி, பாதி, ப்ரியம்) இருக்கிறதோ அங்கே பிரம்மத்தின் சாந்நித்தியம் இருக்கிறது என்று வேதாந்தம் கூறுகிறது. ஆகவே பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

சிறு பொம்மைகளை வைத்துக்கொண்டு சிறுமியர் எவ்வளவு காலம் விளையாடுகிறார்கள்? தங்களுக்குத் திருமணமாகாத வரையில் அத்தகைய விளையாட்டுக்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். திருமணம் செய்துகொண்டு தங்கள் கணவன்மாருடன் அவர்கள் வாழ ஆரம்பிக்கும்போது அந்த விளையாட்டுக்களெல்லாம் நின்றுவிடுகின்றன. திருமணத்திற்குப் பிறகு தங்கள் பொம்மைகளையெல்லாம் பெட்டியில் போட்டு மூடி வைத்துவிடுகிறார்கள். அது போலவே ஈசுவரானுபூதி அடையப்பெற்ற பிறகு மேலும் விக்கிரக வழிபாட்டில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

(ம—வை நோக்கித் தமது பார்வையைச் செலுத்தியபடி): ஒருவன் கடவுளுக்காக ஏங்கும்போது அவரை அடைகிறான். இன்னும் பகவானை அடையாமல் இருக்கிறோமே என்ற பதைபதைப்பு, சாதகன் ஒருவனுக்குத் தீவிரமாக உண்டாக வேண்டும். அத்தகைய பதைபதைப்பு அளவுகடந்து ஒரு சாதகனிடம் தோன்றும் போது அவனது மனம் முழுவதும் கடவுளிடமே சென்று தங்கிவிடுகிறது.

ஒருவனுக்கு ஒரு மகள் இருந்தாள். மிகவும் சிறிய வயதிலேயே அந்தப் பெண் விதவையாகி விட்டாள். அவள் தன் கணவனை அறிந்ததுமில்லை; அவனோடு சேர்ந்து வாழ்ந்ததுமில்லை. சிறுமியான அவள் மற்றப் பெண்கள் தங்கள் கணவன்மாருடன் வாழ்ந்து வருவதைப் பார்த்தாள். ஆதலால் அவள் ஒரு நாள் தன் தந்தையிடம், ''அப்பா, என்னுடைய கணவர் எங்கே?'' என்று கேட்டாள். அதற்கு அவளது தந்தை, ''அம்மா, கோவிந்தன்தான் உன் கணவன். நீ அவனைக் கூவியழைத்தால் அவன் உன்னிடம் வருவான்'' என்று பதிலளித்தார். இவ்விதம் தந்தை சொன்னதைக் கேட்டதும் அந்தச் சிறுமி ஓர் அறைக்குள் சென்று கதவை மூடித் தாழிட்டுக்கொண்டாள். அந்த அறையில் அவள் தனிமையில் இருந்து கோவிந்தனை நினைத்துக் கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள். ''ஏ கோவிந்தா! என்னி

டம் வா. உன்னை நீ எனக்குக் காட்டித்தா. நீ ஏன் என் முன்னால் வராமல் இருக்கிறாய்?'' என்று சொல்லிக்கொண்டே அவள் பரிதாபமாக அழுது அழுது புலம்பினாள். அந்தச் சிறுமியின் மனப்பூர்வமான அழுகுரலுக்குப் பகவானால் செவிசாய்க்காமல் இருக்க முடியவில்லை. அந்தச் சிறுமியின் எதிரில் கிருஷ்ணன் தோன்றி அவளுக்குக் காட்சி தந்து அருள்புரிந்தார்.

குழந்தைக்கு இருப்பதைப் போன்ற முழு நம்பிக்கை ஒரு சாதகனிடம் இருக்க வேண்டும். தாயைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு குழந்தை கதறிக் கதறி அழுகிறது. அது போன்ற கலக்க ஏக்கத்துடன் சாதகன் இறைவனைக் குறித்து அழ வேண்டும். அத்தகைய ஏக்கமும் அழுகையும், சூரியோதயம் போன்று ஆன்மிக வாழ்க்கையில் மிகவும் நல்ல ஓர் அறிகுறியாகும். சூரியன் உதிப்பதற்கு முன்பு கிழக்கு வெளுத்துச் செவ்வானமாகக் காட்சி தருகிறது. செவ்வானத்தைத் தொடர்ந்து அருணன் உதயமாகிறான். அது போலவே ஒரு சாதகன் தன் வழிபடு தெய்வத்தை அடைந்துவிட வேண்டும் என்று தீவிரமாக ஏங்கிக் கண்ணீர் மல்குவானானால், அதைத் தொடர்ந்து அவன் தன் இஷ்ட தெய்வத்தைச் சாட்சாத்கரிக்கிறான்.

ஜடிலன் என்ற ஒரு பையனின் கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன். அவன் ஓர் அடர்ந்த காட்டின் வழியாகத் தன் பள்ளிக்கூடத்திற்குப் போவது வழக்கம். அவ்விதம் காட்டுவழியாகச் செல்வது அவனுக்குப் பயமாக இருந்தது. ஒரு நாள் அவன் தன் பயத்தைப்பற்றித் தாயினிடம் கூறினான். அதற்கு அவள், ''நீ ஏன் பயப்பட வேண்டும்? மதுசூதனனை உனக்குத் துணையாக நீ கூவி அழைத்துக்கொள்'' என்று பதில் சொன்னாள். அதற்கு அந்தச் சிறுவன், ''அம்மா, மதுசூதனன் யார்?'' என்று கேட்டான். ''மதுசூதனன் உன் அண்ணன்'' என்று தாய் பதில் சொன்னாள்.

இதற்குப் பின்பு ஒரு நாள் ஜடிலன் காட்டு வழியாகப் போனபோது அவனுக்குப் பயம் தோன்றியது. அந்தப் பயத்தில், ''ஓ அண்ணா மதுசூதனா!'' என்று கூப்பிட்டான். ஆனால் அவனது குரலைக் கேட்டு ஒருவரும் வரவுமில்லை, பதிலுக்குக் குரல் கொடுக்கவுமில்லை; சிறுவன் ஜடிலன் உரத்த குரலில் கதறியழுதுகொண்டே, ''அண்ணா மதுசூதனா! நீ எங்கே இருக்கிறாய்? என்னிடம் வா. எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது'' என்று அழைத்தான். அதற்குப் பிறகும் மதுசூதனனாகிய கண்ணனால் ஜடிலன் முன்பு வராமல் இருக்க முடியவில்லை. கண்ணன் ஜடிலன் முன்னிலையில் வந்துகொண்டே, ''இதோ நான் இங்கேதான் இருக்கிறேன். நீ ஏன் பயப்படுகிறாய்?'' என்று சொல்லித் தைரியமூட்டினான். அவ்விதம் பேசிக்கொண்டே கண்ணன் அந்தப் பையனுடன் காட்டின் வழியாக நீண்ட தூரம் துணையாகச் சென்றான். பிறகு கண்ணன் ஜடிலனைக் காட்டுக்கு வெளியே கொண்டுபோய் விட்டு, ஜடிலன் பள்ளிக்குச் செல்லும் வழியையும் காட்டினான். ''நீ கூப்பிடும்போதெல்லாம் நான் உன்னிடம் உடனே வருவேன். நீ பயப்படவே வேண்டாம்'' என்று கண்ணன் சிறுவனிடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டு காட்டுக்குள் சென்றுவிட்டான்.

அந்தச் சிறுவனுக்குத்தான் எத்தகைய ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது! அவன் மதுசூதனன் வரவில்லையே என்று எப்படியெல்லாம் ஏங்கி அழுது புலம்பினான்! அந்தச் சிறுவனுக்கு இருந்ததைப் போன்ற முழு நம்பிக்கையை ஒரு சாதகன் இறைவனிடம் கொண்டிருக்க வேண்டும். மதுசூதனனைக் காண அந்தச் சிறுவன் பதைபதைப்புக் கொண்டதைப் போல், ''பகவானைச் சாட்சாத்கரிக்க வேண்டும்'' என்ற அருந்தாகம் கொண்டவனாக ஒரு சாதகன் இருக்க வேண்டும். ○

ஆகாயத்தில் கறுப்பு நிறம் இருப்பதாக அறிவற்றவர்கள் நினைக்கிறார்கள். அது போலவே சச்சிதானந்த ஆத்மாவில் இந்திரியங்களின் தன்மைகளை அவிவேகத்தினால் பார்க்கிறார்கள்.

—ஸ்ரீசங்கரர்

விஜய தீபம்

ஸ்ரீராமபக்த ஹனுமான்

சுக்கிரீவனைத் தேடிக்கொண்டு ராம பிரான், லட்சுமணனேடு வருகிறர். ராம லட்சுமணர்களைத் தொலைவில் பார்த்த சுக்கிரீவன், அவர்களைக் குறித்த விவரங் களைத் தெரிந்துகொண்டு வரும்படி அனுமனை அனுப்பி வைக்கிறன்.

ராம லட்சுமணர்களைச் சந்தித்து ஸ்ரீ ஆஞ்சனேயர் அவர்கள் வந்த நோக்கத்தை அறிந்துகொள்ளுகிறர் — இதுவரை ஏப்ரல், மே இதழ்களில் ஸ்ரீராமபக்த ஹனுமானின் வரலாற்றில் முன்பு பார்த்திருந்தோம். அதன் தொடர்ச்சி இந்த இதழில் இடம் பெறுகிறது.

* * *

இராமர் வந்த காரியத்தை அனுமார் அறிந்து கொண்டார். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு இராமரின் திருவடிகளில் விழ்ந்து வணங்கினர். தமது எளிய நிலையையும், தம்மை ஆட்கொள்ள வேண்டிய காரணத் தையும் விளக்கி அனுமார் கண்ணீர் விட்டுக் கதறினர். அண்ணலும் அனுமனைத் தூக்கி ஆறுதலளித்தார்.

அனுமாரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீராமர் சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டார். வாலியை வதைத்து அவனுக்கு நற்கதி அளித்துவிட்டுச் சுக்கிரீவனுக்கு முடிசூட்டு வித்தார். அரியணையில் ஏறிய சுக்கிரீவன் தான் கொடுத்த வாக்குறுதியை மறந்து சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந் தான். அப்போது அனுமார் தாம் சுக்கிரீவ னுக்கு நல்ல புத்தி கூறிச் சீதையைத் தேடும் வேலையில் ஈடுபடும்படிச் செய்தார்.

வாயுபுத்திரர் சிதறிக் கிடந்த வானர வீரர்களை ஒன்றுதிரட்டினர். அனைவரையும் ராமகாரியத்தில் ஈடுபடச் செய்தார். இராம பிரானின் முத்திரை மோதிரத்தை அனுமாரே, இலங்கைக்கு எடுத்துச் செல்லும் பேறு பெற்றர்.

நூறு யோஜனை அகலமுடைய சமுத்திரத் தைத் தாண்டும் பிரச்னை எழுந்தது. ஜாம் பவான் அனுமாரைத் துதித்து, "ஆஞ்ச னேயா! உன் அவதாரமே ராமகாரியத்திற் காக அன்றே? உன்னையன்றி ஆழ்கடலைக் கடக்க வல்லவர் யார் இருக்கிறர்?" என்று கூற, சிலிர்த்தெழுந்தார் வாயுபுத்திரர். மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுக் கடலைத் தாண்டினர்.

அனுமார் சென்ற வழியில் தேவர்கள் அனுப்பி வைத்த நாகமாதா சுரஸாவைத் திருப்திப்படுத்திய பின்னர், கடலினுள் மறைந்துகொண்டு அல்லல் விளைவித்த ஸிம்ஹிகையைக் கொன்றர். இலங்கை யைச் சென்றடைந்த அனுமார் இலங்கை யைக் காத்து வந்த இலங்கிணியை ஒரு குத்தினல் உயிர் துறக்கச் செய்தார்.

சிறிய உருவத்துடன் இலங்கையினுள் புகுந்தார். விபீஷணனைக் கண்டு அவன் மூலம் அசோகவனத்தில் சிறையிருந்த சீதாபிராட்டியைக் கண்டார். சீதைக்குத் தகவல் கொடுத்துத் தேற்றியபின் அன்னை யின் ஆசியையும் சூளாமணியையும் பெற்றுக் கொண்டார். அசோகவனத்தை அழித்தார்.

அசுரர்களை வதைத்தார். அட்சயகுமாரனைக் கொன்ருர். இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு அவனுடன் சென்று இராவணனைக் கண்டு சாவாமைக்குப் புத்தி சொன்னுர். விதியை வென்ருரில்லை.

இராவணன் அனுமனின் வாலிற்குத் தீயிடச் செய்தான். அதே தீயினுல் அனுமார் இலங்கையை எரித்து, அரக்கர்களைக் கதறிடச் செய்தார்.

இராமர் சேதுவிற்கு அணைகட்டி யுத்தத்திற்குத் தயாரானுர். யுத்தம் நடந்தது. இராவணனும் அவனைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட்டனர். ராம ராவண யுத்தத்தில் அனுமாரின் வீரம் தனிச் சிறப்புடன் விளங்கியது. வானர சைனியத்தின் துயர் துடைப்பதில் அனுமார் மிகவும் கவனம் காட்டினுர். அனுமனின் கர்ஜனையைக் கேட்டாலே ராட்சஸ வீரர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டது.

லட்சுமணன் மேகநாதனது அஸ்திரத்தால் மூர்ச்சையுற்று விழுந்ததும், அனுமார் துரோணுசலம் என்ற மலையை எடுத்து வரப் புறப்பட்டார். அவர் சென்ற வழியில் கெட்ட புத்தி கொண்ட காலநேமியை வதைத்தார். துரோணுசலத்தை எடுத்து வந்து லட்சுமணனை உயிர்ப்பித்தார்.

மாயாவியான அஹிராவணன் தன் மாயையினுல் யுத்தகளத்திலிருந்து ராமலட்சுமணர்களைக் கவர்ந்து சென்றுவிட்டான். அதை அறிந்தவுடனே அனுமார் பாதாள உலகிற்குச் சென்று அஹிராவணனைக் கொன்று ராமலட்சுமணர்களை மீட்டு வந்தார்.

இராம ராவண யுத்தம் முடிந்தது. இராவணன் மறைந்தான் என்ற நற்செய்தியைச் சீதாபிராட்டிக்கு முதல்முதலில் தெரிவித்த பெருமையும், இராமர் திரும்பி வருகிருர் என்ற சுபச் செய்தியைப் பரதனுக்குத் தெரிவித்த பெருமையும் அனுமனுக்குத்தான் உண்டு. இத்தகைய பேற்றை வேறு எவரும் பெற்றிலர். இராமர், அந்த வாய்ப்பைப் பெறத்தக்கவன் அனுமன்தான் என்று அறிந்திருந்தார்.

அனுமன் சொல்லின் செல்வன். கல்வி, புத்திக்கூர்மை, பலம் ஆகியவை நிறைந்து விளங்கியபோதும் அடக்கமே உருவமாக அவர் வாழ்ந்து வந்தார். ''கண்டேன் சீதையை'' என்று கூறிக்கொண்டே வந்த அனுமாரிடம் இராமர், ''நீ எவ்வாறு உலகையே வென்ற இராவணனின் இலங்கைக்குச் சென்று வந்தாய்?'' என்று கேட்டார். அனுமாரோ தாம் ஏதும் செய்யவில்லை, எல்லாம் பிரபு ரகுராமனின் அருள்தான் என்று கூறிவிட்டார்.

அனுமாரின் பக்திக்கு ஈடாக எவரது அன்பையும் கூறமுடியாது. இராமர் அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்ட சமயத்தில் பட்டாபிஷேகம் நடைபெற்ற பிறகு, இராமர் தமது கையால் அனைவருக்கும் பரிசுகள் அளித்தார். அயோத்தி நாட்டின் பொக்கிஷத்தில் இருந்த விலைமதிப்பற்ற பொருள்களில் மிகவும் சிறந்த ஒரு மணிமாலையைச் சீதாதேவி தன் கழுத்திலிருந்து கழற்றி அனுமாரின் கழுத்தில் ஆசையோடு அணிவித்தாள்.

அனுமாரோ அந்த மாலையைக் கழற்றினுர். ஒவ்வொரு மணியாகப் பிய்த்து அதைக் கூர்ந்து பார்ப்பதும், வாயில் போட்டுக் கடித்துத் துப்புவதுமாக இருந்தார். கிடைத்தற்கரிய விலைமதிப்பற்ற பொருளை அனுமார் இவ்வாறு செய்வதைக் கண்டு மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். சிலர் எழுந்து வந்து அனுமாரைத் தடுத்தனர். அனுமார் அவர்களைப் பார்த்து, ''என்னை ஏன் தடுக்கிறீர்கள்? இந்த மணிகளில் எம்பெருமான் இராமனின் பெயராவது அவர் உருவமாவது தென்படுகிறதா என்று நான் பார்க்கிறேன். எந்தப் பொருளில் சீதாராமனின் பெயரோ உருவமோ இல்லையோ அத்தகைய பொருளால் எனக்கு என்ன பயன்?'' என்ருர்.

அனுமார் கூறிய பதிலைக் கேட்டதும் சிலர் அவரைப் பார்த்து, ''அப்படியென்ருல் உமது தேகத்தில் இராமரின் உருவமும் பெயரும் இருக்கின்றனவா?'' என்று கேட்டனர்.

அவ்வளவுதான், உடனே அவர் தமது நகத்தால் மார்பின் மீதிருந்த சதையைக்

கிழித்தார். அவையோருக்குக் காட்டினர். அவருடைய ஒவ்வோர் உரோமத்திலும் ஸ்ரீ ராமனின் பெயர் எழுதியிருந்தது. அவரது இதயத்தின் நடுவே சீதாதேவியோடு இராம பிரான் அரியணையில் அமர்ந்து விளங்கினர். அதைக் கண்டு மக்கள் வியந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். ''ஹனுமான் வாழ்க!'' என்ற ஜயகோஷம் விண்ணைப் பிளந்தது. இராமர் அனுமாரைத் தம் நெஞ்சாரத் தழுவிக்கொண்டார்.

ஸ்ரீராமபக்த அனுமார் என்றென்றும் நைஷ்டிகப் பிரம்மசாரி. இலக்கணத்தில் சிறந்த பண்டிதர். வேத வேதாந்தங்களைக் கற்றுத் தேர்ந்தவர். கூர்மையான அறிவுடன், மட்டற்ற உடல்வலிமையும் கொண்டவர். இவை தவிர, சங்கீத அறிவும் அபாரமாக உண்டு; இனிமையாகப் பாடுவதில் வல்லவர்.

ஒரு முறை தேவர், ரிஷிகள், தானவர் கூடியிருந்தனர். அவர்கள் ஒரு ஜலா சயத்தின் கரையில் அமர்ந்திருந்தனர். சிவபெருமானும் தேவரிஷி நாரதரும் பாடிக் கொண்டிருந்தனர். அந்த அற்புதச் சங்கீதக் கச்சேரிக்கு மெருகூட்டும் வகையில் தானவர் களும் ரிஷிகளும் சேர்ந்து பாடினர்.

திடீரென்று ஹனுமார் தமது இனிய குரலில் ஒரு பாட்டைத் தொடங்கினர். எம்பெருமானின் பெருமையை மிக மிக இனிமையான குரலில் பாடவே, சிவபெரு மானும் நாரதரும் குரல் வந்த திசை நோக்கித் திரும்பினர். அனுமாரின் பாட் டிற்கு முன் அனைவரும் வெட்கி வாய்மூடினர். ஆஞ்சனேயர் ஒருவரே நீண்ட நேரம் பாடிக் கொண்டிருந்தார்.

இந்த உலகில் ராமநாமமும் ராமகதையும் இருக்கும் வரையில் தாமும் இருக்க வேண்டும் என்ற வரத்தை அவர் தாமே கேட்டு வாங்கிக்கொண்டார். இராமர் அசுவமேத யாகம் செய்தபோது குதிரையைக் காப்ப தற்காக ஏற்பட்ட போர்களில் அனுமாரின் பராக்கிரமமே வெற்றி கண்டது.

பாரதத்திலும் அனுமாரின் கதை வரும். அனுமார் அர்ஜுனனின் கொடியில் வீற்றி ருந்தார். அதனால்தான் அர்ஜுனனின் ரதத்தைத் தாண்டிச் செல்ல எவராலும் முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் அர்ஜு னனை அனுமார் காப்பாற்றியிருக்கிறர். பீம சேனனையும் காப்பாற்றியிருக்கிறர்.

அனுமான் தமது வஜ்ரம் போன்ற நகத் தால் ஒரு ராமகாவியத்தை மலைச் சிகரங் களில் வடித்ததாகவும், அதைக் கண்ட வால்மீகி முனிவர் இனித் தமது ராமாயணம் பிரசித்தி பெறாது என வருத்தமுற்றதாகவும், அதை அறிந்த அனுமார் அந்தச் சிகரங் களைப் பெயர்த்துச் சமுத்திரத்திற்குள் தூக்கி எறிந்துவிட்டதாகவும் ஒரு வரலாறு உண்டு. இதன்மூலம், 'உண்மையான பக்தன் புகழுக்கு, பெருமைக்கு, பிறர் மதிப்பிற்கு ஏங்கக் கூடாது' என்பது தெரிகிறது. உண்மையான பக்தராக வாழ்கிறர் அனுமார்.

ராமநாமமோ ராமகதையோ நடக்கும் இடங்களில் அனுமார் மறைவாக, அந்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பே சென்று விடுவார். இரு கைகளையும் கூப்பிக்கொண்டு பக்திப் பரவசத்துடன் அவற்றைக் கேட்பார். அவரது அன்பு, கண்ணீராக வழியும். இத் தகைய பரமபக்தரான ஆஞ்சனேயர் நமக் கும் பக்தியை அளித்தருள்வாராக.

[முற்றும்]

ரா, ம என்ற இரண்டு எழுத்துக்கள் அமுதம் தரும் இனிமையும் இன்பமும் போன்றவை. இந்த ஈரெழுத்துக்கள் உலகைத் தாங்கும் கூர்மத்தையும் (ஆமை), ஆதி சேஷனையும் நினைவூட்டுபவை. இவை அடியார் மனம் என்ற தாமரையை நாடும் வண்டுகளுக்குச் சமமானவை. நாக்கு என்ற யசோதைக்குக் கிருஷ்ணன் பலராமன் போன்றவை.

—துளசி ராமாயணம்



திருமாலின் ஐந்து நிலைகள்

ந. ரா. முருகவேள்

ஐவகை நிலைகள்

திருமால் நெறிச் சமய நூல்கள், அந்தர்யாமித்துவம் பரத்துவம் வியூகம் விபவம் அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளில் திருமால் விளங்குவதாகக் கூறுகின்றன.

இறைவன் உயிர்தொறும் உள்ளும் புறமும் கலந்து பரவி நிற்கும் நிலை அந்தர்யாமித்துவம்.

திருமகளும் தானுமாய் நித்தியர் முத்தர் சேவிக்கப் பரமபதத்தில் திருவோலக்கம் இருக்கும் நிலை பரத்துவம்.

திருப்பாற்கடலில் யோகநித்திரை என்னும் அறிதுயில் கொண்டு உயிர்களைக் காத்தருளும் வகைகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் நிலை வியூகம்.

கொடியோரைத் தெறுதலாகிய துஷ்ட நிக்கிரகமும், நல்லோருக்கு அளித்தல் ஆகிய சிஷ்ட பரிபாலனமும் செய்தருளுவதற்காக, இராமபிரான் கண்ணபிரான் முதலிய அவதாரங்களாகத் தோன்றியருளும் நிலை விபவம்.

வழிபடும் அன்பர்களுக்கு எழுந்து அருள் செய்வதற்காகத் திருவரங்கம் திருமலை பெருமாள்கோயில் முதலிய திவ்விய தேசங்களிலும், அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளி விளங்கும் நிலை அர்ச்சை எனப்படும்.

ஐவகை நிலைகளும் ஆழ்வார்களின் பாடல்களும்

இந்த ஐந்தனுள், பரத்துவ நிலையை 'ஆதியஞ் சோதி உரு', 'குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு' என்றும், வியூக நிலையைப் 'பாற்கடலில் பையத் துயின்ற பரமன்' என்றும், விபவ நிலையை, 'மீனொடு ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்க் கற்கியும் ஆனான்' என்றும், அந்தர்யாமித்துவ நிலையை 'ஒண்சங்கு கதை வாள் ஆழியான் ஒருவன் அடியேன் உள்ளான்' என்றும், அர்ச்சை நிலையைத் 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே, தமர் உகந்தது எப்பேர் மற்றப் பேர்; தமருகந்து எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே அவ்வண்ணம் ஆழியான் ஆம்', 'பின்னானார் வணங்கும் சோதி' என்றும் ஆங்காங்கே ஆழ்வார்கள் தம் அருளிச்செயல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

ஐவகை இடங்கள்

1. திருமால் பரமபதத்தில் நித்தியரும் முக்தரும் தமது அனுபவத்திற்குப் போக்கு வீடாகப் பாடும் சாமகானம் கேட்பாராதலின், பரத்துவநிலை 'பாட்டுக் கேட்கும் இடம்.'

2. 'அசுரர்களாலும் இராக்கதர்களாலும் துன்புறுத்தி நலியப்படுபவர்களான பிரமன் முதலிய தேவர்களைக் காத்தருள்வதற்கு, அவர்களின் துயர ஒலி எங்கிருந்து எப்போது வருமோ?' என்று செவி கொடுத்துக் கொண்டு, திருமால் திருபாற்கடலில் அறிதுயிலில் அமர்ந்திருக்கும் வியூக நிலை, 'கூப்பீடு கேட்கும் இடம்.'

3. அடியவர்களின் துயர ஒலியைக் கேட்ட அளவில் துடித்துக்கொண்டு எழுந்திருந்து, திருப்பாற்கடலினின்று ஆதிசேடன்

ஆகிய கட்டிலை விட்டு நீங்கி, இந்த உலகத்திற்கு இழிந்து வந்து, அயோத்தி மதுரை முதலிய இடங்களில் திருமால் அவதரிக்கும் விபவ நிலை 'குதித்த இடம்.'

4. தாம் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் 'இனிப் புறம் போகேன், புறம் போகல் ஒட்டேனே' என்று இட்ட அடி பெயர விடாமல், அடியார்கள் தன்னைக் கட்டி வளைத்துக்கொள்ளும்படி எளிவந்து, உருவத் திருமேனிகளில் திருமால் உறைகிற அர்ச்சை நிலை, 'வளைத்த இடம்.'

5. அடியார்களின் இதயகமலத்திலே பிரிவற எழுந்தருளியிருந்து, திருமால் தான் உகந்தார்க்குத் தன் அழகைக் காட்டி, நுகரச் செய்து உண்பிக்கும் அந்தர்யாமித்துவ நிலை 'ஊட்டும் இடம்' என்று, இந்த ஐந்து நிலைகளையும்பற்றித் திருமால்நெறிச் சான்றோர்கள் விளக்கியுள்ளார்கள்.

ஐவகை நீர்கள்

1. உயிர்களின் உள்ளத்தில் இருந்து வைத்தும், கண்டு தொழ வேண்டும் என்று விரும்புபவர்களுக்குக் கண்களால் காண இயலாமல், யோகநெறி நின்று பயின்று பெரிதும் முயன்றே காண வேண்டும்படி இருத்தலின், அந்தர்யாமித்துவம், நீர் வேட்கை கொண்டவன் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டாமல் தான் நிற்கும் இடத்திலே நீர் இருந்ததாயினும், கொட்டும் குந்தாலியும் கொண்டு அகழ்ந்தால் அன்றிக் கிடைக்காதபடி தரைக்கு அருகில் ஆழ்ந்துள்ள தண்ணீர் (பூகத ஜலம்) போல்வது.

2. கண்டு பற்றித் தொழ விரும்புபவருக்கு அணுக இயலாமல், நிலவுலகமாகிய லீலா விபூதிக்கு அப்பாற்பட்டிருத்தலின், பரத்துவம், நீர்வேட்கை கொண்டவனுக்கு அண்டத்திற்கு அப்பால் புறம்பே பெருகிக் கிடக்கிற நீர் (ஆவரண ஜலம்) ஒப்பது.

3. கண்டு பற்ற வேண்டும் என்று ஆசைப்படுபவருக்கு, 'பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்' என்கிறபடி, கேட்டிருக்கும் அத்தனையே அன்றிச் சென்று காண அரிய நிலையிலுள்ள வியூகம், இவ்வுலகத்துக்குள்ளேயே இருப்பினும் நீர்வேட்கை கொண்டவர்க்குச் சென்று அடைய முடியாத திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) நிகர்ப்பது.

4. நிலவுலகில் தோன்றிக் கால் தரை தோய நடந்தும், அவ்வக் காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமே பயன் கொள்ளத் தக்கதாய், இக்காலத்திலுள்ளோர் கிட்ட இயலாத விபவம், மிகவும் அருகில் இருந்தும், வெள்ளமாக ஓடும் காலத்தில் இருந்தவர்கள் மட்டுமே பருகலாம்படியாய், வற்றிப்போன காலத்தில் இருப்பவர்க்குப் பயன்படாத பெருக்காறு போன்றது.

5. முற்கூறிய நிலைகளைப் போல அரியதும் சேயதுமாகாமல் எல்லோர்க்கும் எளியதும் இனியதுமாய், அனைவர் கண்ணுக்கும் புலப்பட்டு நின்று, கோவில்களிலும் இல்லங்களிலும் திருமால் எழுந்தருளி நிற்கும் அர்ச்சை நிலை, முற்கூறிய பலவகை நீர்களைப் போல அல்லாமல் எளிதாகச் சென்று இனிதாகப் பருகலாம்படி தேங்கி நிற்கும் மடுவின் நீர் போல்வது.

இனி வேறொரு வகையிலும், திருமாலின் இந்த ஐந்து நிலைகளின் இயல்பைக் குறிப்பிடலாம். பரத்துவ நிலை, எட்டாத

ஒவ்வொரு பொய்யும், ஒவ்வோர் அவுன்ஸ் நல்ல பாம்பின் விஷத்திற்குச் சமம்.

—ஒரு சாது

இறைவன் வர்ணனைக்கு அப்பாற்பட்டவன். எனினும் அவனை வர்ணிக்காமலும் இருக்க முடியாது. ஓரளவு வர்ணித்தாலும் அவனைத் தியானிப்பதற்கு ஒப்பாகும். எனவே வேதங்கள் பலவிதமாகக் கூறுகின்றன.

—துளசி ராமாயணம்

வானத்தில் உள்ள மேகநீர் (ஜீமூத ஜலம்); வியூக நிலை உண்ணற்கியலாத கடல்நீர் (ஸாகர ஸலிலம்); விபவ நிலை ஓடிக்கழிந்த ஆற்றுநீர் (ஸரித் ஸலிலம்); அந்தர்யாமித்துவ நிலை பெருகக்கூடிய கிணற்றுநீர் (கூப பயஸ்); அர்ச்சை நிலை அள்ளியெடுத்து உண்ணும்படி நிறைந்து நிற்கும் குளத்துநீர் (வாபீ பயஸ்) என்றும் பெரியோர் இவற்றின் இயல்பை விளக்கியருளியிருக்கின்றனர்.


நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாடல்

இங்ஙனம் பெரியோர்களால் விளக்கப் பெற்றிருக்கும் திருமாவின் ஐவகை நிலைகளையும்பற்றி,

விண்மீது இருப்பாய்; மலைமேல்
நிற்பாய்; கடல் சேர்ப்பாய்;
மண்மீது உழல்வாய்; இவற்றுள்
எங்கும் மறைந்து உறைவாய்;
எண்மீது இயன்ற புற
அண்டத்தாய்; எனது ஆவி
உண்மீது ஆடி உருக்
காட்டாதே ஒளிப்பாயோ?

என்று நம்மாழ்வார் தம்முடைய திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பாடலில், 'விண்மீதிருப்பாய்' என்றது பரத்துவ நிலை, கடல் சேர்ப்பாய்' என்றது வியூக நிலை, 'மண்மீது உழல்வாய்' என்றது விபவ நிலை, 'எங்கும் மறைந்து உறைவாய்' என்பது அந்தர்யாமித்துவ நிலை, 'மலைமேல் நிற்பாய்' என்பது அர்ச்சை நிலை என்பவற்றை, முறையே உணர்ந்து இன்புறலாம். ○



அறிஞர்கள் பகவானின் புகழைப் பாடித் தங்கள் குரலைப் புனிதப்படுத்திக் கொள்கிறார்கள்.

—துளசி ராமாயணம்

பிறவிக்கடலைக் கடக்கக் கப்பலாக உதவும் வேதங்களை வணங்குகிறேன். பகவானின் புகழைப் பாடுவதில் அவை சளைத்ததே இல்லை.

—துளசி ராமாயணம்

பெருக்கெடுத்துப் பாயும் பெரிய நதிமீது அரசன் பாலம் கட்டினால் சிறு எறும்பும் கூடச் சிரமமின்றி நதியைக் கடக்கும்.

ராமன் கதையை நதியாகவும், முனிவர்களை அரசனாகவும், தன்னை எறும்பாகவும் துளசி இங்கே கற்பனை செய்கிறார்.

—துளசி ராமாயணம்

ராமபக்தி மழைக்காலம் போன்றது. பக்தனது உள்ளம் வயலாகும். ரா, ம என்ற எழுத்துக்கள் (வட இந்தியாவில்) மழை பெய்யும் மாதங்களான ஆவணி புரட்டாசிக்குச் சமம்.

—துளசி ராமாயணம்

ஸ்ரீராமபிரானின் அருளுரை

மனமும் உடலும்

1. மகரிஷியே, நான் சொல்வதைக் கேளுங்கள். காமம் என்பது ஒரு பெரிய மரம். ஆசை என்ற கொடி அதைப் போர்த்தி மூடியிருக்கிறது. அந்த மரத்திற்குக் கணக்கிட இயலாத எண்ணற்ற கிளைகள் இருக்கின்றன. அந்தக் கிளைகளின் மீது சுற்றித் திரியும் மனம், தான் விரும்பும் கனியை ஒருநாளும் பெற முடியாது.

2. ஆபத்து ஏற்படும்போதும் மோகம் தங்களை ஆட்கொள்ளும்போதும் சோர்வடைந்து போகாத மக்கள் மிகவும் அபூர்வம். சுயநல லட்சியம் ஒன்று நிறைவேறியதுமே கர்வம் கொள்ளாத மக்கள் மிகவும் அபூர்வம். பெண்களின் கண்வீச்சுக்கு மனம் குழம்பாமல் இருக்கும் ஆண்கள் மிகவும் அபூர்வம். இத்தகைய அபூர்வமான மக்களைப் பொதுவாகப் பார்க்கவே முடியாது என்ற உண்மை எனக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

3. தான் விரும்பிய பொருள் கைக்குக் கிடைத்துவிட்டால்கூட ஒருபோதும் மனம் திருப்தியடைவதில்லை. ஓட்டைப் பானையில் எவ்வளவுதான் தண்ணீரை ஊற்றினாலும் அது நிறைவதில்லை அல்லவா?

4. லௌகிக இன்பங்களை அடைவதில் பெரிதும் ஆவல் கொண்டுள்ள மனம் எப்போதுமே ஒன்றுமில்லாத காலி மனம்தான். அதற்கு எந்த இடத்திலும் அமைதி கிடைக்காது. மான்கூட்டத்திலிருந்து பிரிந்து வழி காணாமல் தவிக்கும் தனி மான் எந்த இடத்திலும் அமைதி காணாது அல்லவா?

5. அலைகளைப் போன்று எப்போதும் கொந்தளிப்புடன் இருப்பதுதான் மனதின் இயல்பு. சஞ்சலத்திலிருந்து அதற்கு அவ்வளவு சுலபத்தில் விடுதலை கிடைப்பதில்லை. ஒரு விநாடிகூட அது அமைதியாக இருப்பதில்லை. புலனின்பங்களைப் பின்பற்றிப் போய்க் கொண்டே அது கலக்கத்துடன் பல திசைகளிலும் ஓடியபடியே இருக்கிறது.

6. இந்த மனம் என்னும் பேய்க்கு உண்மையில் இருப்பு என்பது அறவே கிடையாது. வீணான கற்பனையின் மூலமே அது ஒரு வடிவத்தை ஏற்கிறது. மனம் என்ற ஒன்று இல்லவே இல்லை என்பதை விவேகத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். என்றாலும் இந்தப் பேயை அடக்கியாள்வது மிகவும் கடினம்.

7. மனம் நம்மை நெருப்பையும்விட மிகவும் அதிகமாக எரித்துவிடக் கூடியது. அது வஜ்ரத்தைவிடக் கடினமானதும் ஆகும். அது புலன் விஷயங்களை நோக்கிப் பாய்ந்தபடி இருக்கிறது. மாமிசத்தைப் பார்க்கும் காகம் அதை உண்பதற்கு விரைந்து பறந்து செல்வதைப் போல, மனமும் புலனின்பத்தை நாடி விரைகிறது. என்றாலும் மறுகணம் அவ்விதம் தொடர்ந்து சென்ற ஒரு பொருளை விட்டு அது விலகியும் சென்றுவிடுகிறது. குழந்தைக்கு இருப்பதைப் போன்ற சலனபுத்தி மனதின் இயல்பாக இருக்கிறது. எந்த ஒன்றிலும் நிலையாக இருப்பது என்பது அதற்கு இயலவே இயலாது.

8. நீர்ச்சுழல் இருக்கும் கடலைப் போலவே, மனமும் மனிதனை எங்கோ தொலை தூரத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடக் கூடியது. கடலைக்கூட வற்ற அடித்துவிடலாம், மலையைக்கூடப் பெயர்த்தெடுத்துவிடலாம், நெருப்பைக்கூடச் சாப்பிட்டுவிடலாம். ஆனால் மனதை அடக்குவது இவை எல்லாவற்றையும்விடக் கடினமான செயலாகும்.

9. ஸ்தூல பஞ்சபூதங்கள் ஐந்து (மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம்) ; தன்மாத்திரைகள் ஐந்து (அணுவான மூலவஸ்துக்கள்—சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம்); புத்தி ; ஞானேந்திரியங்கள் ஐந்து ; கர்மேந்திரியங்கள் ஐந்து—ஆகியவற்றால் ஆக்கப்பட்டு இந்த உடல் அமைந்திருக்கிறது.

10. மரத்திலுள்ள இலை விரைவில் பழுத்துத் தரையில் உதிர்ந்துவிடுகிறது. அதைப் போன்றதே இந்த உடலின் நிலையும் ஆகும். பொய்ஞ்ஞானத்தில் உதிப்பது இந்த உடல். ஆகவே கனவுநிலையைப் போல உடலும் மோக மயக்கங்கள் நிறைந்திருக்கிறது. உடலின் நிலையாமை வெட்டவெளிச்சமான விஷயம்.

11. உடலாகிய காட்டில் மூப்பு என்பதை ஒரு நரிக்கு ஒப்பிடலாம். நரியின் ஊளையைப் போன்ற அபசகுனமான குரல் வேறு கிடையவே கிடையாது. ஐம்புலன்களாகிய குழந்தைகள் மூப்புத் தட்டிச் சோர்ந்துபோன உடலாகிய வீட்டில் சுதந்திரமாக விளையாட முடியாது.

○



இருந்திய திருடன்

நாடோடி

குரு நானக் ஊர் ஊராகச் சுற்றி மக்களுக்கு உபதேசம் செய்வது வழக்கம். ஒரு நாள் அவர் ஒரு கிராமத்தில் உபதேசம் செய்துகொண்டிருந்தபோது, கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து நின்று, அவர் முன்வந்து அவர் பாதங்களில் விழுந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்

குரு நானக் அவனைத் தூக்கி நிறுத்தி, "யாரப்பா நீ? எதற்காக இப்படி அழுகிறாய்?" என்று கேட்டார். "என் பெயர் பீகம்" என்று அவன் சொன்னதைக் கேட்டதும் கூட்டத்தில் இருந்த எல்லோரும் நடுங்க ஆரம்பித்தார்கள். ஏனெனில் அந்தப் பக்கத்தில் அவன் ஒரு பக்காத் திருடன்.

"சரி, நீ ஏன் அழுகிறாய்?" என்று குரு கேட்டார்.

"நான் கொள்ளையடித்துத்தான் என் வாழ்க்கையை நடத்துகிறேன்; அதுதான் துக்கப் படுகிறேன்" என்று அவன் சொன்னான்.

"இன்றுமுதல் நீ கொள்ளையடிப்பது, திருடுவது போன்ற காரியங்களை விட்டுவிடு!" என்றார் குரு நானக்.

"அதுதான் என்னால் முடியாத காரியம். என் துக்கத்தைப் போக்க வேறு உபாயம் சொல்லுங்கள்."

குரு நானக் சற்று நேரம் யோசனை செய்தார். பிறகு முகமலர்ச்சியுடன் அவனைப் பார்த்து, "நான் சொன்னால் நீ கட்டாயம் செய்வாயா?" என்று கேட்டார்.

"திருடாதே. கொள்ளையடிக்காதே என்று சொல்வதைத் தவிர வேறு என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் சத்தியமாக உங்கள் சொற்படி நடப்பேன்" என்றான் திருடன்.

"நான் சொல்லப்போவது மிக எளிமையான காரியம். தினமும் மாலையில், நீ அன்று முழுவதும் என்ன காரியங்கள் செய்தாயோ அவற்றை எழுதிவைத்து, அதை அடுத்த நாள் இந்தக் கூட்டத்தில் படிக்க வேண்டும். இப்படிச் செய்தால் உன் துக்கம் நிவர்த்தியாகிவிடும்" என்றார்.

"பூ! இவ்வளவுதானு! நான் என்னவோ ஏதோ என்று பயந்தேன். அப்படியே செய்கிறேன்" என்ருன் திருடன்.

"நீ வழக்கம் போலத் திருடுவதோ கொள்ளையடிப்பதோ செய். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனல் அதையெல்லாம் எழுதி வைத்துக்கொண்டு இங்கு வந்து படி. போதும்" என்று சொன்னர்.

"அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, திருடன் அவரை வணங்கிவிட்டு அப்பால் சென்ருன்.

திருடன் சென்றதும் குரு நானக் அவனுக்குச் சொன்ன புத்திமதிகளை நினைத்துக் கூட்டத்திலிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். யாராவது திருடு என்று சொல்வார்களோ என்று நினைத்தார்கள்.

அடுத்த நாள் திருடன் கூட்டத்திற்கு வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் வரவில்லை. அதற்கும் அடுத்த நாளும் வரவில்லை.

காரணம் என்னவென்ருல் தான் செய்த காரியங்களையெல்லாம் திருடன் பீகம் மாலையானதும் எழுதத்தான் செய்தான். ஆனல் அவற்றை எல்லோருக்கும் தெரியப் படிப்பது என்பது அவனுக்கு அவமானமாக இருந்தது அதனல் கூட்டத்திற்குப் போகவில்லை. ஆனல் படிப்பதாக வாக்குக் கொடுத்து விட்டோமே, என்ன செய்வது என்று நினைத்தான். 'நான் பிறரிடம் சொல்ல அவமானப்படும் காரியத்தைச் செய்யாமல் இருப்பதுதான் சரி' என்று நினைத்தான்.

சில நாட்களில் அவன் திருட்டுத் தொழிலை விட்டு நல்லவன் ஆனன். அவன் அப்போது குரு நானக்கின் பாதங்களில் விழுந்து, தன்னை அவர் திருட்டுத் தொழிலிலிருந்து காப்பாற்றியதற்கு நன்றி கூறினன். ○

தெய்வ வழிபாடு

நமக்குள்ளேயே இறைவன் இருக்கிருன் என்று சிலர் சொல்லுவார்கள்.

மாட்டினிடம் பால் இருந்தும் அதைக் கறப்பதற்குக் காம்பு ஒன்று இருப்பது போல், நமக்குத் தெய்வ வழிபாட்டிற்கு ஓர் உருவம் அமைத்து அந்த உருவத்தை உள்ளத்தில் பதிய வைத்தோமானல், அங்கே தியானித்து இறைவனைக் காணலாம்.

வழிபாடு செய்ய வேண்டும். வாழ்த்தி, வணங்கி மங்களமெல்லாம் பாட வேண்டும்.

தேர், திருவிழா என்றெல்லாம் நம் போன்றவர் திருந்துவதற்காகத்தான் கொண்டாடப்படுகின்றன.

கோபுரத்தைப் பார்த்தால் முருகன் கோவில் என்றும், அப்படியாவது தெய்வங்களின் ஞாபகம் வரட்டும் என்றுதான் நம் முன்னேர்களும் அரசர்களும் அவற்றைக் கட்டி வழிகாட்டிச் சென்ருர்கள்.

இப்படியெல்லாம் வழிபாடு இல்லாமல் வறட்டு வேதாந்தம் பேசினல் முன்னேற முடியாது. பக்குவம் வரும்முன் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தால் முழங்கால்தான் வலிக்கும்.

முதலில் தெய்வ வழிபாட்டின் மூலம்தான் மேன்மை அடைய வேண்டும் என்பதற்காகவே ஜபம், தபம், தியானம் என்று வைத்திருக்கிருர்கள். —ஞானனந்தர்

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மரியாதை செய்வ தென்றால் அவர் காட்டிய வழியில் பணி புரிய வேண்டும். ஆண்டவனுக்கு முன் சில மலர் களைத் தூவிச் சிறிது மனக்கிளர்ச்சியை வெளிப்படுத்துவதனால் மட்டும் எவரும் ஆன்மிக வாழ்க்கையில் முன்னேறிவிட இயலாது.

ஆழ்ந்த பக்தியுடன் ராமகிருஷ்ணருடைய தியானத்தில் மூழ்க வேண்டும். விவேகத் தைக் கைக்கொண்டு புத்தியைப் பண்படுத்த வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர், 'பக்தனாக இரு; ஆனால் முட்டாளாக இராதே' என்று கூறுவார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசங்களைப் படித்துச் சிந்தித்து அவற்றை உன்னுடைய வையாக ஆக்கிக்கொள். அப்பொழுதுதான் அவற்றின் உட்கருத்து உனக்கு விளங்கும்.

நீ ஏன் அஞ்ச வேண்டும்? உன் இலட்சி யத்தை நீ இன்னும் அடையவில்லையே என்று மனம் தளரக் கூடாது. பொறுமை நிறைய வேண்டும். பொறுமை இல்லாமல் ஆன்ம வாழ்க்கையில் எவரும் முன்னேற முடியாது.

மக்கள் செல்லும் பாதைகள் வெவ்வேறாக இருக்கலாம். பாதைகளைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். இந்த உண்மையை உணர வேண்டும். 'நதிகள் வெவ்வேறு இடங்களில் உதித்து ஒரே சமுத்திரத்தில் கலக்கின்றன. அது போலவே மனிதர்கள் செல்லும் பாதைகள் நேராகவோ கோண லாகவோ இருந்தாலும் எல்லாம், ஆண்ட வனே! எல்லோருக்கும் ஒரே புகலிடமாகிய உன்னை நோக்கியே செல்லுகின்றன.'

நாம் எதை அறிய வேண்டும்? பலவகைப் பட்ட மனிதர்கள் இந்த உலக மேடையில் நாடகமாடுகிறார்கள். அதில் கலந்து கொள்ளாமல் நாம் சாட்சியாகப் பார்த்துக் கொண்டு மட்டும் இருப்போம்.

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பூஜித்து முழு மனதுடன் அவருக்குப் பணி புரிய வேண்டும். அவருடைய திருநாமத்தை ஜபித்து அவரு டைய தியானத்தில் ஆழ வேண்டும்.

உன் மனதை நீ ஆண்டவனுக்கு அர்ப் பணம் செய்ய முடியாவிட்டால் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதனால் என்ன பயன்? முழுமனதுடன் அவரிடம் பிரார்த்தனை செய். அப்போது எங்கே இருந்தபோதிலும் அவரைக் காண்பாய்.

எவரிடமும் சச்சரவு செய்யாதே. எல்லோ ரும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய குழந்தைகள் என்ற எண்ணத்தில், உன் நெருங்கிய உறவினரை நேசிப்பது போல் ஒவ்வொரு வரிடமும் அன்பு செலுத்து. ஒருவர் உன்னைப் புகழ்ந்தாலும், மற்றொருவர் உன்னை இகழ்ந் தாலும் பொருட்படுத்தாதே. நீ ஏதாவது எவருக்காவது கொடுக்க விரும்பினால் கொடு; ஆனால் பிரதியுபகாரத்தை எதிர்பார்க்காதே. எல்லோரும் நல்லவர்கள், மிகவும் நல்ல வர்கள்; அல்லாத ஒருவரையும் நான் காணவில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய அவதார லீலையில் லட்சிய வாழ்க்கை வாழ்ந்து காட்டுவதற் காகவே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உன் மனதை ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவடித்தாமரைகளில் நிலைபெறச் செய்.

உன் உடல் எங்கே இருக்கிறதென்று நீ ஏன் கவலைப்பட வேண்டும்?

'உன் உள்ளத்தில் ஒரு மூலையிலோ ஒரு வனத்திலோ தியானம் செய்' என்று ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுவார். படாடோபமாக வேதாந்த வாக்கியங்களை நவிலுவதோ, மத நூல்களிலிருந்து மேற்கோள்களைக் கூறுவதோ உனக்கு உதவிபுரியாது. புண்ணிய க்ஷேத் திரங்களில் சாதுக்களுடன் காலத்தைக் கழிப் பதுங்கூடப் பயன் தராது. எது முக்கிய மென்றால், பரிபூர்ண நேர்மையுடன் உள்ளத் தையும் உதட்டையும் ஒன்றுபடுத்த வேண்டும்.

சீ! சீ! உனக்கு ஏது தோல்வி? அந்த மாதிரி எண்ணங்களை மனதில் நுழைய விடாதே. தூய அன்னையிடம் நீ சரணடைந் தது பல பிறவிகளில் நீ செய்த புண்ணி யத்தின் பயன். அன்னையின் திருவருளுக்குப் பாத்திரமான நீ எப்படி இழிவடைய இயலும்?

நீ பல பேருக்கு உதவிபுரிவாய் என்பதை நிச்சயமாக நம்பு. நீங்கள் நமது குரு தேவரின் செல்வக் குழந்தைகள். உங்களுக் குத் தூய அன்னையின் அருள் எப்படிக் கிடைத்தது? மனதைப் பலவீனமாக்கும் எல்லா எண்ணங்களையும் அப்புறப்படுத்தி விரட்டிவிடுங்கள். அன்னையின் அருளால் நீங்கள் நிச்சயமாகச் சாவற்றவர்கள், பரிசுத்தமானவர்கள், முக்தர்கள், தெய்விக மானவர்கள்.

ஒரே மனது படைத்தவர்கள் சிலர் இருந் தாலுங்கூட, அவர்கள் உலகை இயக்கும் எண்ணத்தின் போக்கை மாற்றிவிட இயலும். ஒரு கூட்டத்தைச் சேர்த்துச் சந்தடி செய்வ தனால் என்ன லாபம்? உள்ளத்தில் உரமும் நன்னம்பிக்கையுமுடைய வெகு சிலரே இருந்தாலுங்கூட, மனதில் திடமான நம்பிக்கையும் ஊக்கமும் வீரமும் அஞ்சாமை யும் உடையவர்களானால், உங்கள் பணி சிறப்பாக வளரும்.

உங்களில் ஒவ்வொருவரும் நேர்மைக்கும் கர்மத்திற்கும் தர்மத்திற்கும் வீர புருஷனாக விளங்க ஆண்டவன் அருள் புரியட்டும். ஆண்டவனுடைய திருநாமத்தைப் போற்று வதில் உங்கள் உள்ளம் மகிழட்டும். மனதில் ஒருபொழுதும் கவலைக்கோ அவநம்பிக் கைக்கோ இடம்தர வேண்டாம். நிமிர்ந்து நின்று உள்ளன்புடனும் முழுமனதுடனும் ஆண்டவனுக்குச் சேவை செய்யுங்கள். கர்வம் உள்ளத்தில் புகாமலிருக்கட்டும். ○

சாதனை வேண்டும்

புதையல் என்றால் அதிர்ஷ்டத்தினால் முயற்சி இல்லாமல் கிடைப்பது என்று அர்த்தம் செய்துகொள்கிறார்கள். அதன் உண்மையான கருத்து வேறு.

புதையல் என்றால், புதைந்து மறைந்து இருப்பது. இயற்கையாக முயற்சி செய்பவர்களுக்குக் கிடைக்கிறது என்பதுதான் அதன் பொருள்.

தகப்பன் தன் இரண்டு பிள்ளைகளிடம், 'இந்த நிலத்தை விற்க வேண்டாம்; புதையல் இருக்கிறது' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். அவர் காலத்திற்குப் பிறகு, தரிசாகக் கிடந்த எல்லா நிலத்தையும் வெட்டி, புதையலுக்காக நன்றாகத் தேடிப் பார்த்தார்கள் பிள்ளைகள். ஒன்றும் கிடைக்கவில்லை. 'சரி, நமக்கு அதிர்ஷ்டம் இல்லை; அதனால் கிடைக்கவில்லை' என்று சமாதானப்படுத்திக்கொண்டு அந்த நிலத்தில் சாகுபடி செய்தனர். எதிர்பாராதபடி விளைச்சல் அமோகமாக இருந்தது. நல்ல லாபம் கிடைத்தது. 'இதைத்தான் புதையல் என்று அப்பா சொன்னார்' என்று பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது.

''சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை.'' —ஞானானந்தர்

சொல்லேன் இறைவா!

டி. வி. கல்யாணசுந்தரம்

இறைவா!

ஜீவராசிகளைப் பேணிக் காப்பதற்கென்றே எல்லா ஐச்வர்யங்களையும் (அருட் செல்வம், பொருட் செல்வம், ஆற்றல் செல்வம், அறிவுச் செல்வம்) படைத்துள்ளனை. ஆகையால் நீ கொடுத்த அறிவுச் செல்வத்தின் துணையாலேயே உன்னை ஸர்வேச்வரன் (எல்லா ஐச்வர்யங்களுக்கும் இருப்பிடமானவன், எஜமானன், அதிகாரி) என உணர்கிறோம், அழைக்கிறோம்.

எம்மை நீ படைத்ததனுல் நீயே எங்கள் தாய். ஐச்வர்யங்களைத் தந்து எங்களை நீ காப்பதனுல், தாயும் தந்தையும் நீயே. நீ தந்துள்ள ஐச்வர்யங்களை ஆராய்ந்து பயனடைய அறிவைத் தந்துள்ளதனுல் நீயே எம் ஆசான். மனம் ஆயாசமுறும் போது உன்னை நினைத்தவுடன் ஓர் ஆச்வாசம் ஏற்படுவதனுல் நீயே எம் நண்பன். சுருங்கச் சொன்னுல், எங்கள் சிற்றறிவால் நாங்கள் கற்பிக்கும் லோகாயத உறவுமுறை, நட்புமுறை எதற்கும் முதல் உரிமை உன்னுடையதே என்பது உனது அளவிடமுடியாத ஆற்றலையும் கருணையையும் அறியும்போது தெளிவாகிறது.

உன் மக்களாகிய எங்களுக்கு எல்லாமாகத் திகழும் நீ ஏன் எங்கள் யாவருக்கும் நன் மக்களாக வாழும் திறனை அளிக்கவில்லை? இந்த ஒரு பொறுப்பை மட்டும் ஏன் எங்களுக்கே விட்டுவிட்டாய்? எங்களைப் பரீக்ஷை பார்க்கவா? நீ பரீக்ஷை வைத்தால் நாங்கள் தோற்றுத்தான் போவோம். காரணம், நீ இவ்வளவையும் தாராளமாக வாரி வழங்கி விட்டுக் கூடவே 'சுயநல நோக்கு' என்ற பேதைமையையும் 'தற்காப்புக்காக' என்று எம்முள் சேர்த்துப் படைத்ததுதான். நாங்கள் அதைத் தற்காப்புக்காக மட்டும் பயன்படுத்துவதோடு நிறுத்திக்கொள்ளாமல் நீ தந்துள்ள அறிவின் திறன் கொண்டே ஆணவமாய் வரம்புமீறிச் செயற்பட்டுச் 'சுயநலச் சகதி'யில் ஆழ்ந்து அமிழ்ந்து போய்க்கொண்டே இருக்கிறோம்.

இந்தச் சுயநலப் போக்கால், ஒருவரை ஒருவர் ஏமாற்றுகிறோம், சுரண்டுகிறோம், அடிமைப்படுத்துகிறோம், புண்படுத்துகிறோம், பகைக்கிறோம், கொல்கிறோம், நீ தந்த சுவர்க்கத்தைப் புழுதிமயமாக்குகிறோம், நரகமாக்குகிறோம்.

எம் இனத்தைத் தவிர நீ படைத்த எந்தப் பொருளுமே உன்னைப் போலவே சமரசத்தோடு இயங்குகிறது. காற்றை எந்த மொழியால் குறிப்பிட்டுச் சுவாசித்தாலும் எங்களுக்குப் பயனளிக்கிறது. நீரை எந்த மொழியால் குறிப்பிட்டுப் பருகினுலும் தன் குணம் பிறழாமல் எங்கள் தாகத்தைத் தணிக்கிறது. தீயும் ஆகாயமும் நிலமும் நிலமிசை தோன்றும் பொருள்களும் அவ்வாறே எந்த மொழியில் குறிப்பிட்டாலும், விருப்பு வெறுப்பு அற்ற சமரச நிலையிலே எங்களுக்கு முழுமையாகப் பயன் தருகின்றன.

மனிதனைத் தவிர ஏனைய ஜீவராசிகள் கூடத் தம் இயல்பான தன்மையை மறைத்து எங்களிடம் பழகுவதில்லை. ஆனுல் நாங்கள் மட்டும் ஏன் ஒருவருக்கொருவர் வேற்றுமை பாராட்டுகிறோம்? ஏன் ஒருவருக்கொருவர் வேஷமிட்டு உள்ளொன்றும் புறமொன்றுமாகப் புழுங்குகிறோம்?

நீ அளித்த இந்தச் 'சுயநல நோக்கி'ற்குப் பதிலாய் உனது இணையில்லாத 'சமரச நோக்கை' முழுமையான அளவில் எம்முள் வைத்திருக்கக் கூடாதா?

எங்களது சுய சிந்தனைத் திறத்தால், ஒழுக்கத்தால், பண்பாட்டால், நெறியால், பரோபகாரப்பாங்கால், தயையால், தியாகத்தால், 'சுயநல நோக்கை' அடக்கி அழித்துச் 'சமரச நிலையை' வளர்த்து நாங்களே சுவாதீனப்படுத்திக் கொள்ள வேண்டும் என ஏன் வரையறுத்தாய்?

யாம் நீயாக ஆக, இதுகூடச் செய்யாமல் எல்லாவற்றையுமே நீயே செய்துவிடுவதானுல் அதில் என்ன சுவை இருக்கும் என்ற எண்ணமா?

சொல்லேன் இறைவா, சொல்லேன். ○

அருள்நெறிக் கதை :

யயாதியின் கதை

ஆங்கரை கந்தசாமி

பாண்டவர்களின் முன்னோர்களில் நகுஷன் என்ற சக்திவாய்ந்த அரசன் இந்திரபதவி அடைந்தான். அவனுடைய பிள்ளை யயாதி.

யயாதியின் வாழ்க்கை நமக்குச் சில முக்கியமான படிப்பினைகளை உணர்த்துகிறது. காமத்துக்கு வசப்படுவது, அகங்காரம் கொண்டு பிறரை அவமதிப்பது ஆகிய தீய குணங்கள் மிகவும் கேடு விளைவிப்பவை என்பதை நாம் யயாதியின் கதையிலிருந்து அறிகிறோம்.

யயாதி வனத்தில் வேட்டையாடச் சென்றிருந்தான். அப்போது ஒரு பெண் கிணற்றில் விழுந்திருந்ததைப் பார்த்து அவளை வெளியே எடுத்தான். அவள் சுக்கிராசாரியரின் மகள் தேவயானி. அவள் அசுரராஜன் பெண்ணான சர்மிஷ்டையால் விரோதம் காரணமாகக் கிணற்றில் தள்ளப்பட்டிருந்தாள்.

தேவயானி யயாதியைத் தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டினாள். அதற்கு அவன், ''நீ பிராம்மணப் பெண், நான் க்ஷத்திரியன். நான் உன்னைத் திருமணம் செய்துகொள்வது சரியல்ல'' என்று கூறினான்.

மறுபடியும் ஒரு சமயம் யயாதி தேவயானியைச் சந்திக்க, அவள் விருப்பத்திற்கு இணங்கி, சுக்கிராசாரியர் யயாதிக்குத் தேவயானியைத் திருமணம் செய்து வைத்தார்.

சர்மிஷ்டை தேவயானிக்குப் பணிப்பெண்ணாக அவளுடன் யயாதியின் நகரம் சென்றாள்.

யயாதி தேவயானிக்குத் தெரியாமல் சர்மிஷ்டையிடம் அன்புகொண்டு, புத்திரர்களை உண்டுபண்ணினான். பின்பு இதைத் தேவயானியின் மூலம் சுக்கிராசாரியர் அறிந்து, யயாதியை முதுமை அடையுமாறு சபித்தார். யயாதி, ''என் இளவயதின் திருப்தியைத் தேவயானியிடம் நான் அடையவில்லை; இந்த மூப்பு என்னை அடையாமலிருக்க வேண்டும்'' என்று சுக்கிராசாரியரிடம் வேண்டினான்.

சுக்கிராசாரியர், ''இந்த முதுமையை நீ வேறொருவனிடம் மாற்றிக் கொள்ளலாம்'' என்று சொன்னார்.

யயாதி, ''என் புதல்வர்களில் ஒருவரிடம் இந்த முதுமையை மாற்றிக்கொள்ளுகிறேன், அனுமதி கொடுங்கள்'' என்று வேண்டினான்.

சுக்கிராசாரியர் அனுமதி தந்து முதுமையை ஏற்றுக்கொள்ளும் யயாதியின் மகன் புகழ்மிக்க அரசனாக விளங்குவான் என்றும் சொன்னார்.

முதுமையை அடைந்த யயாதி தன் புதல்வர்களிடம், ''எனது முதுமையை ஏற்றுக்கொண்டு உங்கள் இளமையைத் தாருங்கள்'' என்று வேண்டினான். முதல் நான்கு புதல்வர்களும் யயாதியின் வேண்டுகோளை மறுத்து நிராகரித்தனர். அவர்களை யயாதி சபித்தான்.

ஐந்தாவது மகனான பூரு என்பவன் யயாதியின் வேண்டுகோளுக்குச் சம்மதித்துத் தந்தையின் மூப்பைப் பெற்றுக்கொண்டு தன் இளமையை யயாதிக்குத் தந்தான். மீண்டும் இளமையைப் பெற்ற யயாதி காம சுகங்களை அனுபவிப்பதில் பல ஆண்டுகள் ஈடுபட்டான்.

முடிவில் அவன் வைராக்கியம் அடைந்து பூருவினிடம் பின்வருமாறு சொன்னான் :— ''நான் விஷயசுகங்கள் எனப்படும் லௌகிக இன்பங்களை அனுபவித்தேன். விருப்பமானது விரும்பினவற்றை அனுபவிப்பதனால்

அடங்குவது ஒரு காலத்திலுமில்லை. நெய் விடுவதனால் நெருப்பு எப்படி மேன்மேலும் எரிகிறதோ, அப்படி ஆசைகள் அனுபவிக்க அனுபவிக்க மேலும் மேலும் அதிகமாகத்தான் வளருகின்றன. எது நல்லறிவில்லாதவர்களுக்கு விட முடியாததோ, எது மனிதன் தளர்ச்சியடைந்தாலும் தான் தளர்ச்சியடையாததோ, எது உயிருள்ள வரையில் இருக்கும் நோயோ, அப்படிப்பட்ட ஆசையை விடுகிறவனுக்குத்தான் சுகம். ஆதலால் இதை நான் விட்டுப் பிரம்மத்திடம் மனதை வைத்து, சுக துக்கமாகிய த்வந்த்வங்களை-இரட்டைகளை, எனது என்ற பற்றை ஒழித்து, வனம் சென்று தவம் செய்வேன்.'' இவ்வாறு சொன்ன யயாதி பூருவுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து வானப்பிரஸ்தம் மேற்கொண்டான். வானப்பிரஸ்தத்திலிருந்து அவன் சுவர்க்கம் அடைந்தான்.

ஒரு சமயம் சுவர்க்கத்தில் இருந்தபோது இந்திரன் யயாதியுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது யயாதி தான் பூருவுக்குச் சொன்ன புத்திமதிகளையும், 'கோபிப்பது தவறு. பொறுமையே சிறந்தது' என்றும் இந்திரனிடம் கூறினான். இந்திரன், ''தவத்தில் நீ யாருக்கு ஒப்பானவன்?'' என்று யயாதியிடம் கேட்டான். யயாதி, ''தேவர்களிலும் மனிதர்களிலும் கந்தர்வர்களிலும் ரிஷிகளிலும் தவத்தில் எனக்கு ஒப்பானவன் எவனையும் நான் காணவில்லை'' என்று பதில் கூறினான்.

அதைக் கேட்ட இந்திரன், ''ஒப்பானவர்களையும் மேலானவர்களையும் தாழ்வானவர்களையும் அவர்களின் மகிமையை அறியாமலே நீ அவமதிக்கிறாய். ஆதலால் உனக்கு இந்தப் புண்ணிய லோகங்கள் முடிவடையட்டும். உன் புண்ணியம் அழிந்து இப்போதே சொர்க்கத்திலிருந்து விழுவாய்'' என்றான்.

யயாதி, ''நான் தேவலோகத்தை விட்டு விழும்போது சாதுக்களின் நடுவில் விழுவதையே விரும்புகிறேன்'' என்று இந்திரனிடம் வேண்டினான். இந்திரன், ''யயாதியே, நீ சாதுக்களின் அருகிலேயே விழுவாய். அங்கு விழுவதனால் உரிய காலத்தில் சொர்க்கத்தைத் திரும்பவும் அடைவாய். இதை அறிந்துகொண்டு இனி உனக்குச் சமமானவர்களையும் மேலானவர்களையும் தாழ்வானவர்களையும் நீ அவமதிக்காதே'' என்று சொன்னான்.

யயாதி சுவர்க்கத்திலிருந்து விழுவதை, யாகம் செய்துகொண்டிருந்த அஷ்டகன் என்பவன் கண்டான். அவன் யயாதியை நோக்கி, ''சூரியனுக்கு ஒப்பான பிரகாசத்துடன் விளங்கும் நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? சாதுக்களின் இடத்தில் இருப்பதனால் நீ பயத்தை விட்டுவிடு'' என்று சொன்னான்.

இறைவன் அருள் பெறும் வழி

ஆடு, மாடு போன்ற பிராணிகளின் பிறவியில் அவற்றின் தோல், மாமிசம், கொம்பு போன்றவை மற்றவர்களுக்குப் பலவிதங்களில் பயன்படுகின்றன.

மரஞ்செடி கொடிகள் மற்ற ஜீவராசிகளின் உணவிற்காகத் தழை, காய், பழம் இவற்றைத் தருகின்றன.

மனிதன் ஒருவன்தான் நல்ல பிறவி எடுத்தும் 'ஸ்வாஹா' என்ற முறையில் தனக்கு என்று தன்னலப்பற்றுடன் இருக்கிறான். அப்படி இருக்கக் கூடாது. தன்னலமற்றுப் பிறருக்கு உதவுவதில் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அருள் கிடைக்கும்.

பிற உயிர்களைத் துன்புறுத்தாமல் இருப்பது நல்ல தர்மமாகும். பாவம் விலகி, அருள் கிடைத்து, ஜன்ம சாபல்யம் அடைவதற்கு இது முறை.


நல்லோருடன் உறவு கொள்வதும் பிறருக்கு உதவியாக வாழ்வதும் வாழும் முறையாகும்.

யயாதி பதில் கூறினன் :— ''நான் நகுஷனின் புதல்வனும், பூருவின் தந்தையுமான யயாதி. எல்லோரையும் அவமதித்துப் பேசியதனுல் தேவலோகத்தை விட்டு விலக்கப்பட்டுப் புண்ணியம் குறைந்து இப்போது நழுவி விழுகிறேன். இழிவான உலகத்திற்குக் காரணமான பாவம், பணிவில்லாதவனிடத்தில் இருக்கிறது. அகங்காரத்தை விட வேண்டும். எப்போதும் சாதுக்களின் நடத்தையை ஒருவன் பின் பற்றி நடக்க வேண்டும். தெய்வமே பெரிது என்று நினைப்பவன் எந்த வகையிலும் துன்பத்தையும் மகிழ்ச்சியையும் அடைய மாட்டான்'' என்ருன்.

அஷ்டகன் யயாதியிடம் தர்மங்களைக் குறித்து வினவினன். யயாதி சொன்னன் : ''தவம், தானம், புலன்களை அடக்குதல், மனதை ஜயித்தல், நாணம், உள்ளும் புறமும் ஒத்திருத்தல், எல்லாப் பிராணிகளிடமும் கருணை ஆகிய இந்த ஏழு பண்புகளும், மனிதர்கள் சுவர்க்க லோகத்தை அடைவதற்குப் பெரிய வாயில்கள் என்று சொல்லுகிருர்கள். தமோகுணம் மிகுந்த மாந்தர் எப்போதும் அகங்காரம் கொள்வது காரணமாக அழிகின்றனர் என்று பெரியோர் சொல்லுகின்றனர். வெகுமானத்தினுல் கௌரவிக்கப்பட்டவன் சந்தோஷத்தை அடைவது தகாது. அவமானத்திற்காகத் துன்பத்தையும் அடையக் கூடாது. மனதை வசப்படுத்தியவர் பிரம்மத்தை அறிந்து இந்த உலகத்தில் மேலான மோட்சத்தையும் அடைவர்'' என்று சொன்னன்.

யயாதி நான்கு ஆசிரம தர்மங்களையும் அஷ்டகனுக்குச் சொல்லி, ''சந்நியாசியானவன் குணங்கள் நிறைந்தவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், எல்லாவற்றையும் விட்டவனும், வீட்டில் படுக்காதவனும், கையில் ஒன்றுமில்லாதவனும், செய்கைகள் குறைந்தவனும், தனியாகத் தேசங்களில் சஞ்சரிப்பவனும் ஆவான். வனத்தில் வாழும் முனிவன் அக்கினி இல்லாதவனும், பிறந்த குலமும் வித்யா வம்சமும் இல்லாதவனுமாகி, மறைக்கத்தக்க அங்கத்தை மறைக்குமளவு ஆடையையும், உயிர் தரிக்குமளவு ஆகாரத்தையும் விரும்பக் கடவன். விரோதத்தையும் கர்வத்தையும் கபடத்தையும் கோள் சொல்வதையும் கோபத்தையும் ஆசையையும் விட்டுவிட்ட எவனுக்கு 'எனது' என்பது இல்லையோ அவன்தான் தர்மம் தெரிந்தவன் ஆவான்'' என்று கூறினன்.

அஷ்டகன், அவனுடன் இருந்த பிரதர்த்தனன், வசுமான், சிபி ஆகிய நால்வரும், ''எங்களுக்குக் கிடைக்கக் கூடிய புண்ணிய உலகங்களை நாங்கள் உனக்குத் தானமாகக் கொடுக்கிருேம். அவற்றைப் பெற்றுக் கொண்டு நீ சுவர்க்கம் செல்வாய்'' என்று யயாதியிடம் சொன்னுர்கள். அவர்களுக்கு யயாதி, ''நான் க்ஷத்திரியன். தானம் வாங்கமாட்டேன்'' என்று பதில் கூறினன்.



அப்பொழுது ஆகாயத்தில் ஐந்து ரதங்கள் தெரிந்தன. அதே சமயம் யயாதியின் பெண் மாதவி அங்கு வந்தாள். அவளுக்கு யயாதியைக் கண்டதும் அவன் தன் தந்தை என்பது புரிந்தது. அவள் யயாதியை வணங்கி, ''என் தவத்தையும், என் புதல்வர்களும் உமது பேரர்களுமான (தௌஹித்ரர்களுமான) இவர்கள் செய்த தானங்களையும் தவங்களையும் ஏற்றுக்கொண்டு சொர்க்க லோகம் செல்லுங்கள்'' என்று பிரார்த்தித்தாள். தன் புதல்வர்களிடம், ''இவர் உங்கள் பாட்டனுர்'' என்றும் கூறினுள். யயாதி, ''நான் மகளாலும் பேரர்களாலும் கரையேற்றப்படுகிறேன். இது முதல் பிதிரு கர்மத்தில் பெண்சந்ததி புண்ணிய பலனைத் தருவதாகும்'' என்று உரைத்தான்.

பிறகு யயாதியும் நான்கு பேரர்களும் விமானங்களில் ஏறிச் சொர்க்கம் சென்ருர்கள்,

யயாதி தர்மம் தெரிந்த, புகழ்பெற்ற அரசனாக இருந்தான். எனினும் காமவசப் பட்டு, சர்மிஷ்டையிடம் அன்பு கொண்ட குற்றத்திற்காக முதுமையை அடைந்தான். மேலும் அவன் காமத்தையே விரும்பித் தன் மகனிடமிருந்து மீண்டும் இளமையைப் பெற்ருன். அதன் பின்பு வைராக்கிய மடைந்து வனம் போனது, 'காமம் மனிதனின் மோட்சத்திற்கு முதல் பகைவன்' என்பதை நன்ருக நமக்கு விளக்குகிறது.

அதே போல், சுவர்க்கத்தில் யயாதி கர்வ முற்றுப் பிறரை இகழ்ந்தும், அதனுல் சுவர்க்கத்தினின்று நழுவியதும், தன் பேரர் களின் புண்ணியத்தால் சுவர்க்கம் திரும்பி அடைந்ததும் நமக்கு அகங்காரத்தை நீக்கு வதன் அவசியத்தை வற்புறுத்துகின்றன.

பூரு தந்தையின் விருப்பத்திற்கு இணங்க அவரிடம் முதுமையை வாங்கிக்கொண்டு பின்பு மகிமை பொருந்திய அரசனாக இருந்து அவன் வம்சம் புகழ் பெற்றதைப் பார்க்கும்போது, பிதாவின் வார்த்தையைக் காப்பாற்றி அவருக்குப் பிரியமாக நடப்பது எவ்வளவு மேன்மையான குணம் என்பதை நாம் அறிகிருேம். சரித்திரத்தில் இப்படி நடந்து கொண்டவர்கள் சிலரே. ராமர் தசரதன் வார்த்தைக்காக அரசைத் துறந்து வனவாசம் செய்தார். பீஷ்மர் சந்தனுவுக் காக ராஜ்யத்தை விட்டுப் பிரம்மசரிய விரதம் பூண்டார். பரசுராமர் தம் பிதாவின் கட்டளைப்படித் தாயையே கொன்ருர். பிறகு பிதாவிடம் வரம் பெற்று அவளைப் பிழைப்பித்தார்.

அஷ்டகன் முதலியோர் யயாதி தங்கள் பாட்டனுர் என்று தெரிவதற்கும் முன்பே தங்கள் புண்ணிய பலன்களை ஏற்றுக் கொண்டு அவரைச் சொர்க்கலோகம் செல்லச் சொன்னது, சாதுக்களின் நற் குணத்தையும் பரோபகாரச் சிந்தையையும் காட்டுகிறது.

யயாதி அஷ்டகனுக்குச் சொன்ன தர்மங் களில் மனிதன் தள்ள வேண்டிய தீய குணங்களும் மோட்சமடையும் சாதனங்களும் விவரிக்கப்படுகின்றன.

இவ்வாறு யயாதியின் கதை பலவிதத் திலும் நமக்கு வாழ்க்கைக்கு வேண்டிய உபதேசங்களைத் தருகிறது. மகாபாரதத்தின் பெருமை, இதுபோல் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் கதையிலும் தர்மங்களையும் நீதிகளையும் மக்களுக்குப் போதிப்பதே ஆகும். ○

பராபக்தி

ஈசுவரன் ஒன்றுதான் இருப்பது. அதிலிருந்து நாம் தோன்றிேனும் என்ற எண்ணம் இருக்கும் வரையில் பக்தி செய்ய வேண்டும்.

பகவான் பக்தன் என்ற வேறுபாடில்லாத பராபரமான பக்தியே பராபக்தி எனப்படும். பகவானும் தானும் ஒன்று என்ற அந்த நிலையை அடையும் வரை பக்தி செய்ய வேண்டும். அப்போதுதான் இவையெல்லாம் மித்யை என்று திடமாகத் தெரியும்.

இந்த உலக இன்பமெல்லாம், எதிரியிடம் சிக்கிய சக்கரவர்த்தி அடிமையாக ஆகாரம் பெற்றுச் சாப்பிட்டு வரும் இன்பம் போன்றது.

இந்த உலக இன்பத்தை நுகரும்போது சர்வேசுவரனுகிய நாம் நமது உண்மையான சர்வாதிகாரத்தை மறந்து சிற்றின்பத்தில் லயித்திருக்கிருேம்.

அந்தப் பராபக்தி நிலையைப் பிறர் சொல்லி விளக்க முடியாது. அதுவே நிரதிசயா னந்தம். பராபக்தி நிலையைப் பெறும்போதுதான் பரிபூரணத்வம் விளங்கும். அது வரையில் பகவான் இருக்கிருர் என்ற திடம் வேண்டும், பக்தி வேண்டும். ஆத்மஞானம் வந்த பின்தான், யாவும் இல்லை என்று சொல்லலாம்.

—ஞானனந்தர்

கங்கையின் மகிமை

நாடோடி

மதன்லால் சாண்டில்ய என்பவர் டில்லியில், ஸ்ரீராம் காலேஜ் ஆப் காமர்ஸ் என்ற கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். ஒரு சமயம் அவருடைய தம்பியின் மனைவி மிகுந்த நோய்வாய்ப்பட்டிருந்தாள். யமனுக்கும் அவளுக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயம் பார்த்து அவருடைய தங்கைக்கு மணம் நிச்சயம் செய்திருந்தார்கள். தம்பியின் மனைவியும் பிழைக்க வேண்டும், தங்கைக்கும் கல்யாணம் நன்கு நடக்க வேண்டும் என்று அவர் மிகவும் கவலையோடு இருந்தார்.

ஒரு நாள் இரவு, தம்பியின் மனைவிக்கு உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டது. எல்லாரும் கவலையோடு அவள் படுக்கையைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று தம்மை அறியாமல் மதன்லால் சொன்னார்: ''பகவானே, இந்தக் கஷ்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்று. ஒரு வருஷம் முழுவதும் நான் மாதத்தில் ஒரு நாள் கங்கா ஸ்நானம் செய்கிறேன்'' என்றார். இத்தனைக்கும் அவர் ஆர்யசமாஜி; கங்கா ஸ்நானம், பூஜை முதலிய விஷயங்களில் அதிக நம்பிக்கை இல்லாதவர்.



தம்பியின் மனைவிக்கு ஏதாவது ஆனாலும் அது வீட்டில் ஆக வேண்டாம் என்று சொல்லி, அவளைப் பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். ஆச்சரியம் என்னவென்றால், மதன்லால் வேண்டிக்கொண்டதற்குப் பலனாகவோ என்னவோ, அவள் உடம்பு தேறினாள். கல்யாணத்தன்று அவளால் ஆஸ்பத்திரியில் சற்று எழுந்து உட்கார முடிந்தது. உடனேயே தான் மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்றும், தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்தாள். வீட்டிற்கு வந்து மாப்பிள்ளைக்கு ஆசி வழங்கினாள்.

அன்றையிலிருந்து மதன்லாலுக்குக் கங்கா ஸ்நானத்திலுள்ள நம்பிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. ஒரு சிறு கண்ணாடிப்புட்டி நிறையக் கங்காஜலத்தை நிரப்பி வைத்து, அதை எப்பொழுதும் தம் சட்டைப் பையிலேயே வைத்துக்கொண்டிருப்பார்.

ஒரு வருஷம் முடிந்தது. பன்னிரண்டு தடவை கங்கா ஸ்நானம் செய்தாகிவிட்டது. இது காரணமாக வீட்டில் எல்லாம் நன்மையாகவே நடக்கவே, ''ஆயுள் முழுவதும் மாதம் ஒரு முறை கங்கா ஸ்நானம் செய்வேன்'' என்று பிரதிக்ஞை செய்து கொண்டார்.

ஒரு சமயம் அவருடைய மருமகள் திடீரென்று ஏதோ வியாதியாக விழ, அது மிகவும் அதிகரித்துவிட்டது. ஆஸ்பத்திரியில் அவளைச் சேர்த்தார்கள். வியாதி அதிகரித்ததே தவிர, குணமாகும் வழியாகத் தெரியவில்லை. இனிப் பிழைக்கமாட்டாள் என்று டாக்டர்கள் கையை விரித்து விட்டார்கள். அப்பொழுது மதன்லால் ஒரு கையில் கங்காஜலமும், இன்னொரு கையில் கீதைப் புஸ்தகமும் வைத்துக்கொண்டு பகவானை வேண்டிக் கொண்டார். ''பகவானே! இந்த மருமகள் தாங்கள் எங்களுக்குக் கொடுத்தது. அவளை மீண்டும் எடுத்துக்கொள்ளத் தங்களுக்குப் பூரண உரிமை உண்டு. ஆனால் தாங்கள் இவளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தால் நான் இனி ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவை கங்கா ஸ்நானம் செய்வேன்'' என்று வேண்டிக் கொண்டார்.

என்ன ஆச்சரியம்! அடுத்த நாளே டாக்டர்கள், ''உங்கள் மருமகள் பிழைத்துக் கொள்வாள். கவலையில்லை'' என்று சொன்னார்கள். அவளும் சிறிது சிறிதாகக் குணமாகத் தொடங்கினாள்.

ஒரு சமயம் மதன்லாலுக்கு ஆஸ்துமா நோய் கண்டது. அப்பொழுது அவர், ''மாதம் இரண்டு தடவை என்மீது கங்கா ஜலம் படும்போது என் நோய் நிச்சயமாகக் குணமாகிவிடும். கங்காதேவி எங்கிருந்தாவது ஒரு மூலிகை கொண்டு வருவாள். அது என்னைக் குணப்படுத்திவிடும்'' என்று நம்பிக்கையோடு சொல்வார்.

அதன்படியே திடீரென்று ஒரு நாள் அவருடைய ஆஸ்துமா அவரை விட்டுப் பறந்தது.

மதன்லால் அந்தக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றதும், காஷ்மீரிலுள்ள இன்னொரு கல்லூரியின் முதல்வராக அவரை நியமித்தார்கள். காஷ்மீரிலிருந்து மாதம் இரண்டு தடவை கங்கைக் கரைக்குச் செல்வதென்றால் கஷ்டமான காரியமாதலால் என்ன செய்யலாம் என்று ஸ்ரீஹரிபாபா என்ற பெரியவரைக் கேட்டார். அவர் சொன்னார், ''இப்பொழுது மாதம் இரண்டு தடவைக்குப் பதில் மாதம் மூன்று தடவை ஸ்நானம் பண்ணுவது என்ற விரதம் எடுத்துக்கொள். அதாவது வருஷத்திற்கு முப்பத்தாறு தடவை ஆகிறது. இந்த முப்பத்தாறு தடவையும் சேர்ந்தாற்போலக் கோடை விடுமுறையின்போது செய்வது என்று வைத்துக்கொள். அத்துடன், வருஷத்திற்கு ஒரு நாள் அதிகரித்துக்கொண்டே செல்'' என்று உத்தரவிட்டார்.

குடும்பத்தில் யாராவது வெளியூர் செல்வதாக இருந்தால் சரி, உடனே ஒரு கண்ணுடிப்புட்டி கங்காஜலத்தை மதன்லால் அவர்களுக்குப் பரிசாக அளிப்பது வழக்கம். ''இதை உங்கள் சட்டைப் பையில் எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். இது உங்களைக் காப்பாற்றும்'' என்று சொல்வார்.

அவருடைய தம்பி ஆனந்தசொருப் சர்மா என்று ஒருவர் இருந்தார். அவருக்கு எல்லாம் பெண்கள்; பிள்ளைகளே கிடையாது. ''நீ மாதம் ஒரு தடவை கங்கா ஸ்நானம் செய்வது என்று வைத்துக்கொள். உனக்குப் பிள்ளை பிறக்கும், பார்'' என்றார் மதன்லால். அதன்படியே தம்பி செய்ய, அவருக்கு ஒரு வருஷம் கழித்துப் பிள்ளை பிறந்தது. அதே மாதிரி இவருடைய உறவினரில் ஒருவர் ஒரு பெரிய வழக்கில் அகப்பட்டுக்கொண்டு தவித்தார். ''வழக்கு ஜயிக்கும் வரையில் மாதம் ஒரு தடவை கங்கா ஸ்நானம் செய்வது என்று வைத்துக் கொள்ளுங்கள்'' என்று இவர் யோசனை கூறினார். மூன்று வருஷம் வழக்கு நடந்தது. அந்த உறவினரும் விடாமல் மாதம் ஒரு முறை கங்கா ஸ்நானம் செய்து வந்தார். வழக்கு அவர் பக்கம் தீர்ப்பாயிற்று.

மதன்லால் இன்னொரு வழக்கமும் வைத்திருந்தார். என்ன கஷ்டம் வந்தாலும் சரி, அதைக் கங்காதேவிக்கு மனுப்போல எழுதி, கங்கையின் பிரவாகத்தில் விடுவார். சிறிது நாளில் இவர் கஷ்டம் தீர்ந்துவிடும்.

கங்கையின் மகிமையை நாம் எல்லோரும் இவரது வாழ்க்கையிலிருந்து உணர்வோமாக! ○



வாழ்க்கையில் அடைய வேண்டிய முக்தி இன்பத்தைக் கொடுக்க வல்லது தவமே யாகும். தவத்தைக் காட்டிலும் உயர்ந்தது, தவத்திற்குச் சமமானது, வேறு எதுவும் இல்லை. தவத்திற்குச் சமம் தவமேயாகும். ஆகவே நீங்கள் தவம் இயற்றத் தொடங்குங்கள்.

—கச்சியப்பர்



மைத்ராயணி உபநிஷதம்

மைத்ராயணி உபநிஷத்தின் கருத்துக்கள் இங்கே தரப்பெறுகின்றன.

மைத்ராயணீ உபநிஷத்து, கிருஷ்ண யஜுர்வேதத்திய 'மைத்ராயணீ ஸம்ஹிதை'யைச் சார்ந்தது. மித்ரன் என்ற சூரியனுடைய உபாசனையைக் கூறுவதனால் இது 'மைத்ராயணீ உபநிஷத்' எனப் பெயர் பெற்றது.

1

ப்ருஹத்ரதன் என்ற அரசன் தன் மூத்த மகனை ஆட்சியில் நியமித்துவிட்டு, 'உடலும் உலகும் எல்லாம் நிலையற்றவை' என்ற வைராக்கியத்துடன் வனம் புகுந்தான். வனத்தில் தவத்தை மேற்கொண்டு, உயரத் தூக்கிய கைகளுடன் சூரியனை நோக்கி நிற்கலானான். ஆயிரம் நாட்களுக்குப் பின், ஆத்மஞானியும், புகை இல்லாத அக்கினியைப் போல் கொழுந்து விட்டெரியும் பிரம்ம தேஜஸ்ஸுடன் கூடியவருமான பகவான் சாகாயன்யர் அவன்முன் தோன்றி, ''எழுந்திரு, எழுந்திரு. என்ன வரம் வேண்டுமோ, கேள்'' என்றார்.

அரசன் முனிவரை வணங்கி, ''பகவானே! எனக்கு ஆத்மஞானமில்லை. தாங்கள் தத்துவஞானி எனப் புகழ் பெற்றவர். ஞானத்தை எனக்குப் புகட்டி அருள வேண்டும்'' என்றான்.

முனிவர், ''இந்தக் கேள்வி மிகக் கடினமானது. இட்சுவாகு குலத்தோனே! இதை விட்டு, வேறு ஆசைகளின் பூர்த்தியைக் கேட்டுக்கொள்'' என்றார்.

அரசன் அவருடைய பாதங்களைத் தொட்டுப் பின்வருமாறு கூறினான் :

பகவானே! எலும்பும் தோலும் மாமிசமும் மலமூத்திரமும் நிறைந்த சாரமற்ற இந்த உடலில் ஆசைகளை அனுபவிப்பதனால் ஆவதென்ன?

காமம் கோபம் பசி தாகம் மூப்பு நோய் மரணம் ஆகியவற்றுடன் கூடிய உடலில் சுக போகத்தினால் ஆவதென்ன? இவை யாவுமே அழிவன எனக் காண்கிறேன். புல் பூண்டு போலவும், கொசு ஈப் போலவும் எல்லாம் தோன்றித் தோன்றி அழிபவை. இவற்றினால் ஆவதென்ன?

பெரிய வில்லாளிகளும் சக்கரவர்த்திகளுமான ஸுத்யும்னன், யௌவனாச்வன், அச்வபதி, அரிச்சந்திரன், அம்பரீஷன் போன்ற பல அரசர்கள் எல்லோரும்

பார்த்துக் கொண்டிருக்கும்போதே இந்த உலகை விட்டு எங்கோ வேறு உலகிற்குப் போய்விட்டார்கள். அவர்களது போன்ற பதவியால்தான் ஆவதென்ன? கந்தர்வர், யக்ஷர், அரக்கர், பூதகணங்கள், பிசாச க்ரஹங்கள் எல்லாமே அழிந்துபோவதைக் காண்கிறோம்.

பெரிய கடல்கள் வற்றிப்போவதையும், மலைச்சிகரங்கள் விழுந்துபோவதையும், துருவநட்சத்திரம்கூட இடம் பெயர்வதையும், பூமியும் இடம் மாறுவதையும் காணும் இந்த உலகில் ஆசைகளால் ஆவதென்ன? இந்தச் சம்சார சக்கரத்தில் பிறந்து இறந்து உழல் வதனல் என்ன பயன்? பாழுங்கிணற்றில் விழுந்துவிட்ட தவளை போல் இருக்கும் என்னைக் கைதூக்கி விடுங்கள். தங்களைச் சரண் புகுகிறேன். தாங்களே எனக்குக் கதி என்று கூறி, அரசன் சாகாயன்ய முனிவரிடம் வேண்டினன்

2

சாகாயன்யர் கூறியதாவது:— அரசே! பிரம்மவித்யையைப் பற்றிப் பகவான் மைத்ரேயர் எனக்கு உபதேசித்ததை உனக்குக் கூறுகிறேன்.

பிரம்மம் வாக்குக்கு அப்பாற்பட்டது என்று கேட்டுள்ளோம். அது பரிசுத்தமானது, பாவனமானது, சூன்யம் போன்றது, சாந்தமானது, பிராணன் இல்லாதது. அந்த ஆத்மா ஆள்பவன் இல்லாதது, அளவற்றது, அழிவற்றது, நிலையானது, என்றுமுள்ளது, பிறப்பற்றது, சுதந்தரமானது, தன் மகிமையால் நிலைத்திருப்பது. அதனல்தான் இந்த உடல் சேதனத்தைப் போல் காணப்படுகிறது. இந்த உடலை இயக்குவதாக உள்ளது அதுவே.

ஆத்மா தன்னை (ஐந்து பிராணன், ஐந்து ஞானேந்திரியங்கள் முதலிய) ஐந்தைந்தாகப் பிரித்துக்கொண்டு, புத்தியாகிய குகையில் உறைகிறது. மனோமயமாகவும் பிராணமயமாகவும் பிரகாச வடிவங்களை அது ஏற்கிறது. எண்ணியதை எண்ணியபடி செய்யும் சத்யசங்கல்ப ஆகாச ஆத்மாவாகிய அது நமது இதயத்தின் உள்ளே இருந்து கொண்டு, தன்னை 'அக்ருதார்த்தன்—செய்ய வேண்டியதைச் செய்யாதவன்' போல் கருதி, உடலைப் பிளந்து இந்திரிய வாயில்களை உண்டாக்கிக்கொண்டு உலக விஷயங்களை அனுபவிக்கிறது. ஐந்து ஞானேந்திரியங்களாகிய கடிவாளங்களுடன், ஐந்து கர்மேந்திரியங்களாகிய குதிரைகள் பூட்டிய தேர் போன்றது இந்த உடல். மனமே தேரோட்டி. இயற்கை, ஓட்டும் சவுக்கு. இப்படி ஓட்டப்பட்டு இந்த உடல், சக்கரமுள்ள தேர் போலவும், சேதனம் படைத்தது போலவும் சுற்றி வருகிறது. இப்படி அமைந்த சரீரத்தை இயக்குவிப்பது இந்த ஆத்மாதான்.

3

'பூதாத்மா' என்று சொல்லப்படும் இன்னுமோர் ஆத்மா இருக்கிறது. இது புண்ணிய பாவங்களான கர்மபலன்களால் சூழப்பெற்று, நல்ல யோனிகளையும் கெட்ட யோனிகளையும் அடைந்து, சுகம் துக்கம், புண்ணியம் பாவம் முதலிய துவந்தங்களால் கவரப்பட்டுக் கீழும் மேலும் சுழல்கிறது. இதை விவரிப்போம்.

பூதாத்மா என்பதில், 'பூத' என்ற சொல்லால் ஐந்து தன்மாத்திரைகளுடன் கூடிய ஐந்து பூதங்கள் (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்) குறிப்பிடப்படுகின்றன. அவற்றின் தொகுதியே உடல் எனப்படுவது. இங்ஙனம் எது சரீரம் எனப்படுவதோ அதுவே 'பூதாத்மா' என்று கூறப்பட்டது.

ஒரு குளத்தில் நீர்த்துளி போல் அதில் ஆத்மா உள்ளது. அதுவே தாழ்மையடைந்து பிரகிருதியின் குணங்களால் மூடப்பட்டதாக ஆகிறது. மூடப்பட்டதனல் அது தனக்குள்ளேயே இருந்து தன்னை இயக்குவிப்பவரும் பிரபுவுமான பகவானைக் காண்பதில்லை. குணக்கூட்டங்களால் திருப்தியடைந்து, அதனல் மாசடைந்து, திடமிழந்து, சஞ்சலமடைந்து, ஆசைகளினுல் உந்தப்பட்டு, தன் நிலையை இழந்து அது உடலிலேயே அபிமானம் உடையதாக ஆகிவிட்டது. அந்த ஆத்மா 'இது என்னுடை

யது' என்று எண்ணிக்கொண்டு, தான் செய்த கர்மங்களின் பயனில் கட்டுண்டு, தாழ்வடைந்து, தன்னைத் தானே, ஒரு பறவை மாதிரி வலையில் வீழ்த்திக்கொண்டு, விடுவித்துக்கொள்ளத் தெரியாமல் சுற்றிச் சுற்றி வருகிறது.

4

சப்தம் ஸ்பர்சம் முதலிய 'அர்த்தங்கள்' (பொருள்கள்) எவை உண்டோ அவை 'அனர்த்தங்களே'யாகும்; தீங்கு விளைவிப்பனவேயாகும். அவற்றில் பற்று வைத்த பூதாத்மா மேலான பதவியை மறந்து விடுகிறது. பூதாத்மாவிற்கு இந்த மறதியைப் போக்கக் கூடிய ப்ரதிவிதி (மருந்து) ஒன்று உண்டு; அதுதான் தனது ஆசிரமத்திற்கு உரிய சுவதர்மத்தை அனுஷ்டிப்பதனுல் ஏற்படும் ஞானோதயம். சுவதர்மமே அனைத்தையும் அளிக்கும். அடிமரத்திலிருந்து மேற்கிளைகளுக்குப் போவது போல் இதிலிருந்து மேலே போகலாம். இல்லையேல் கீழேதான் போக வேண்டும். இந்தச் சுவதர்மம் வேதங்களில் கூறப்பட்டுள்ளது. சுவதர்மத்தைக் கைவிட்டவன் எந்த ஆசிரமத்திற்கும் தகுதியுடையவனுகான். ஓர் ஆசிரமத்தில் நிலைபெற்றவன்தான் தவம் செய்ய இயலும். தவம் புரியாதவனுக்குக் கர்மசுத்தியோ, ஆத்மஞானத்தை அடைதலோ இல்லை.

தவத்தினுல் சத்துவகுணம் அடையப்படுகிறது. சத்துவத்தினுல் நல்ல மனமும், நல்ல மனதின் வலிமையினுல் ஆத்ம சாட்சாத்காரமும் கிட்டுகிறது. ஆத்ம சாட்சாத்காரத்தினுல் பந்தங்களினின்று விடுதலையடைந்து ஜீவன்முக்தியை அடைகிறுன்.

விறகு இல்லாத நெருப்பு எப்படித் தன் மூலத்தில் ஒடுங்குகிறதோ அப்படியே எண்ணமில்லாத சித்தம் தன் மூலத்தில் ஒடுங்குகிறது.

சித்தமே சம்சாரம் (பிறவிச் சுழல்). அதை முயற்சியுடன் சுத்தம் செய்ய வேண்டும். எப்பொழுது சித்தம் தன்மயமாகிறதோ அப்பொழுது சாச்வதமான இரகசியத்தை அறிய இயலும்.

சித்தத்தின் தெளிவினுல் புண்ணியமும் பாவமுமாகிய கர்மம் அழிகிறது. தெளிவடைந்த ஜீவன் ஆத்மாவில் நிலைபெற்று மாறுபாடில்லாத நித்யசுகத்தை அனுபவிக்கிறுன்.

ஜீவனுடைய சித்தம் விஷயத்தை நாடுவதில் எப்படிப் பற்றுக் கொண்டுள்ளதோ அப்படி அது பிரம்மத்திடம் பற்றுக் கொண்டால் எவன்தான் பந்தத்திலிருந்து விடுபடமாட்டான்?

சுத்தம் என்றும் அசுத்தம் என்றும் மனம் இரு வகையானது. காமசங்கல்பமுடைய மனம் அசுத்தமானது; காமமில்லாதது சுத்தமானது.

ரா, ம என்ற இந்த இரண்டு எழுத்துக்கள் நர-நாராயணர் போல் நெருக்கமுடையவை; உலகையும் அடியார்களையும் காப்பாற்றுபவை; பக்தி என்ற பாவையின் காதணி போன்றவை; உலகிற்கு நன்மை தரும் சூரிய—சந்திரர் போன்றவை.

—துளசி ராமாயணம்

காற்றில் உணர்ச்சி போலவும், கரும்பில் வெல்லக்கட்டி போன்றும், பாலினுள் நெய் போன்றும், பழத்தில் ரசம் போன்றும், பூவினுள் வாசனை போன்றும் எம் இறைவன் எங்கும் கலந்து நிற்கிறுன்.

—திருமந்திரம்

நல்லோர் தம் நலத்தைப் பிறர் நலத்திற்காகத் தியாகம் செய்வார்கள். நடுத்தரமானவர்கள் தம் வயிற்றையும் பிறர் நலத்தையும் கருதிச் செயலாற்றுவார்கள். கடையர்களோ, வயிற்றிற்காகப் பிறர் நலத்தைக் கெடுப்பார்கள். அவர்களை மனித உருவத்தில் வந்த அரக்கர் எனலாம். ஆனுல் சிலர் தமக்கும் ஒரு லாபமின்றிப் பிறர் நலத்தைக் கெடுக்கிறுர்களே, இவர்களை என்னவென்று அழைப்பது என்று எமக்குப் புரியவில்லை.

—பர்த்ருஹரியின் நீதிசதகம்

மனம் லயமும் விக்ஷேபமும் இல்லாமல் நிச்சலமாக எப்பொழுது 'அமனோபாவம்' என்ற நிலையை அடைகிறதோ அதுவே பரம பதம்.

இதயத்தில் மனம் ஒடுங்கி நசித்துப் போகும் வரையில் அதை அடக்க வேண்டும். அதுவே ஞானமும் மோட்சமும். மற்றதெல் லாம் நூல் விஸ்தாரமேயாம்.

மனதினுடைய மலம் நீங்கி ஆத்மாவில் புகுந்தவனுக்கு எந்தச் சுகம் உண்டோ அதை வாய்ச் சொல்லால் வர்ணிக்க இயலாது. ஆனால் தனக்குத் தானே அந்தக் கரணத்தில் அதை உணரலாம்.

நீரில் நீரும், நெருப்பில் நெருப்பும், ஆகாயத்தில் ஆகாயமும் எப்படி ஒன்றுபட்டு வேருகக் காணப்படுவதில்லையோ அப்படியே உள்ளே புகுந்து மறைந்த சித்தத்தை யுடைய புருஷன் முக்தியடைகிறான்.

மனிதனுடைய பந்தத்திற்கும் மோட்சத் திற்கும் மனமே காரணம். விஷயப் பற்றுடைய மனம் பந்தத்திற்கும், நிர்விஷய மான மனம் முக்திக்கும் காரணமாம்.

5

பிரம்மத்திற்கு ரூபம் இரண்டு; 'மூர்த்தம் அமூர்த்தம்—உருவம், அருவம்' என்று. எது உருவமோ அது அஸத்யம். எது அருவமோ அது ஸத்யம், பிரம்மம். எது பிரம்மமோ அது சுயம்ஜோதி—பேரொளி. எது ஜோதி யோ அது ஆதித்யன். அதுவே 'ஓம்' என்ற மந்திரத்தால் குறிக்கப்பெறுகிற ஆத்மா. அது தன்னை மூன்றாகப் பிரித்துக்கொண்டது. ஓங்காரத்திற்கு மூன்று மாத்திரைகள்: அ—உ—ம. அவற்றினாலேயே இவ்வுல கெல்லாம் ஊடும் பாவும் போல் குறுக்கும் நெடுக்கும் வியாபிக்கப்பட்டுள்ளது. இப்படி ஆதித்தியனிடத்தில் 'ஓம்' என்று தியானித்து ஆத்மாவிடம் கூட வேண்டும்.

பிரம்ம சொரூபம் 'ஓம்' என்று ஒலிப்பது. அது புல்லிங்கம், ஸ்த்ரீலிங்கம், நபும்ஸகம் என்று மூன்று லிங்கங்களாகவும், அக்கினி வாயு ஆதித்தியன் என்ற மூன்று ஒளிகளாக வும், பிரம்மா விஷ்ணு ருத்ரன் என்ற மூன்று உலகநாயகர்களாவும், கார்ஹபத்யம் தக்ஷிணாக்னி ஆஹவனீயம் என்ற மூன்று அக்கினிகளாகவும், ரிக் யஜுஸ் ஸாமம் என்ற மூன்று வேதங்களாகவும், பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் என்ற மூன்று உலகங்களாகவும், இறந்தகாலம் நிகழ் காலம் எதிர்காலம் என்ற மூன்று காலங் களாகவும், பிராணன் அக்கினி சூரியன் என்ற உஷ்ணங்களாகவும், அன்னம் ஜலம் சந்திரன் என்று உயிரைப் போஷிப்பன வாகவும், புத்தி மனம் அகங்காரம் என்ற சேதனமாகவும், பிராணன் அபானன் வியானன் என்ற உயிர்நிலைகளாகவும், யாகத்தில் தியாகம் செய்யும் யஜமானன் ப்ரஸ்தோதா அர்ப்பிதா என்பவர்களாகவும் இவ்வாறாக இந்த ஓம் என்ற அக்ஷரம் பரமாகவும் அபரமாகவும் அனைத்துமாக ஆயிற்று.

'தத் ஸவிதுர் வரேண்யம்' என்று தொடங் கும் காயத்ரீ மந்திரத்தில் உலகை உற்பத்தி செய்யும் ஸவிதா எனப்படும் சூரியனே சிறந்த ஆத்மப்ரகாசத்தின் பிரதிநிதியாகப் போற்றப்பெற வேண்டும் என்று பிரம்ம வாதிகள் கூறுகிறார்கள்.

'பர்கோ தேவஸ்ய தீமஹி' என்ற இரண் டாவது அடியில், இந்தச் சூரியதேவனு டைய சிறந்த ஒளி எது உண்டோ அதைத் தியானிக்கிறோம் என்பது கருத்து.

'தியோ யோ நः ப்ரசோதயாத்' என்ற மூன்றாவது அடியில், 'நः தியः' என்றால், நம்முடைய புத்தி சக்திகள்; அவற்றை 'யः ப்ரசோதயாத்' சூரியனிடத்தில் இருந்துகொண்டு எந்தப் பரமாத்மா தூண்டு கிறாரோ என்பது கருத்து. 'பர்கः' என்ற சொல்லை மேலும் விளக்குகையில், இந்தச்

நெல்லைக் குற்றி அரிசியைப் பிரிப்பது போல், யுக்தியினால் பஞ்ச கோசங்களிலிருந்து ஆத்மாவைப் பிரித்துத் தெரிந்துகொள்.

—ஸ்ரீசங்கரர்

சூரியனிடமும் நட்சத்திரங்களிலும் கண்ணிலும் காணும் ஒளி ஒன்றே என்பது கருத்து. அல்லது 'பர்ஜதி-எரித்து அழிக்கிறது' என்பதனால் ருத்ரனைக் குறிக்கும் என்று பிரம்மவாதிகள் கூறுகிறார்கள். அல்லது, 'கச்சதி, ஆகச்சதி—அவனிடமிருந்தே எல்லா உயிர்களும் தோன்றுகின்றன' என்பதனால் 'பர்க:' என்று பரமாத்மாவே சூரியனிடம் தியானம் செய்யப்படுகிறது.

'ஸூயமாநத்வாத்'—பகைவர்களை அழிப்பதனால் 'ஸூர்யன்' எனப் பெயர். 'ஸவநாத்'—அனைத்தையும் உண்டாக்குவதனால் 'ஸவிதா'. 'ஆதாநாத்'—அனைவரையும் கவர்வதனால் 'ஆதித்யன்'. 'பவநாத்' — தூய்மையாக்குவதனால் 'பவமாந:'. இப்படி ஆதித்யன் அழிவில்லாத ஆத்மா என்று கூறப்பட்டது.

அந்த ஆத்மாதான் அறிபவன், நினைப்பவன், செல்பவன், சிருஷ்டிப்பவன், மகிழ்பவன், செயல்புரிபவன், பேசுபவன், ருசி பார்ப்பவன், மோப்பவன், பார்ப்பவன், கேட்பவன், தொடுபவன், உருப் படைத்த உடலில் உறையும் பிரபு எனக் கூறப்படுகிறது.

எங்கு அறிவு இரண்டுபட்டதோ, அங்கேயே அது பார்க்கிறது, மோக்கிறது, சுவைக்கிறது, தொடுகிறது. அனைத்தையும் ஆத்மா உணர்கிறது. எங்கு அறிவு இரண்டற்ற அத்வைதமாகிவிட்டதோ, காரியமும் காரணமும் இல்லாததோ, அங்கே அது வாக்கினால் வர்ணிக்க முடியாததாகவும், உவமையற்றதாகவும், விளக்க முடியாததாகவும் உள்ளது.

இந்த ஆத்மாதான் ஈசானன், சம்பு, பவன், ருத்ரன், பிரஜாபதி, விச்வஸ்ரஷ்டா, ஹிரண்யகர்ப்பன், ஸத்யம், பிராணன், ஹம்ஸம், சாஸ்தா, விஷ்ணு, நாராயணன், அர்க்கன், ஸவிதா, தாதா, விதாதா, ஸம்ராட், இந்திரன், இந்து என்ற எல்லாப் பெயராலும் அழைக்கப்படுவது.

பொன்மயமான கோளவடிவில் அக்கினிப் பிழம்பால் மூடப்பட்ட அக்கினி போல் ஆயிரம் கண்களுடன் இந்தப் பரமாத்மாதான் சூரியனாகப் பிரகாசிக்கிறார். அவரைத்தான் தேடி அறிய வேண்டும். எல்லா உயிர்களுக்கும் அபயமளித்து இந்திரியங்களை அப்புறப்படுத்தித் தன் சரீரத்திலேயே அவரை அடைய வேண்டும்.

விசுவரூபியாகவும், கிரணங்களுடன் கூடியவராகவும், அனைத்தையும் அறிபவராகவும், புகலிடமாகவும், இரண்டற்ற பேரொளியாகவும், எரிப்பவராகவும் உள்ள இவரைத் தங்கள் ஆத்மாவாக ஞானிகள் அறிகிறார்கள். ஆயிரம் கிரணங்களுடையவராகவும் நூற்றுக் கணக்கான வடிவம் கொண்டு பிரஜைகளின் பிராணனாகவும் இந்தச் சூரியபகவான் உதிக்கிறார். ○

வாழ்வின் லட்சியம்

பெரிய கடைத்தெருவுக்குச் சென்று, என்ன வாங்குவது என்று நிச்சயிக்கத் தெரியாமலும், கையில் பணம் எடுத்துப் போகாததனால் வாங்க முடியாமலும் திண்டாடும் ஒருவன் வீட்டிற்கு வந்து, தனக்கு இந்தப் பொருள்தான் மிகவும் அவசியமாக வேண்டும் என்று தீர்மானித்து, அதை வாங்க லட்சியம் கொண்டவனாய், அதற்குப் பணம் சேர்த்த பிறகு கடைக்குச் சென்று அதை வாங்கினான்.

அதைப் போலவே நாமும் வாழ்க்கையின் லட்சியத்தை அறிந்து, அதிலே குறியாய் அதையடைய, தெய்வநெறியில் விடாமுயற்சியுடன் நாட வேண்டும். இதுதான் கடைத்தெருவுக்குச் சென்றவனிடமிருந்து நாம் கற்க வேண்டிய படிப்பினையாகும்.

—ஞானானந்தர்

கடவுளோடு வாழ்ந்தவர்

ஏதோ ஓர் ஆசை நிறைவேறும் பொருட்டு, சில அன்பர்கள் கொண்டு வந்த தின்பண்டங்களை ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுக்குக் கொடுக்கமாட்டார். நரேந்திரனிடம் மட்டும்தான் இந்த விதியை மீறுவார். அதே போல் ஜீவன்முக்தி நிலையை எய்திய பின் அகோரமணி தேவியிடமும் இந்த விதியை மீறி நடந்ததுண்டு.

ஒரு நாள் பலர் ஏதோ ஆசை நிறைவேறும் பொருட்டுப் பலவிதத் தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு தட்சிணேசுவரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் அறைக்கு வந்தனர்.

அந்தச் சமயத்தில் கோபாலனின் அன்னையும் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீராமகிருஷ்ணரோ ஒரு குழந்தை தன் தாயைக் கண்டது போல் ஆனந்தமடைந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் முடியிலிருந்து பாதம் வரை தம் கையால் வருடிக் கொடுத்து, கோபாலனின் அன்னையின் தேகத்தைப் பற்றி, ''இந்தப் பை முழுவதும் ஹரியால் நிரம்பியது; ஹரிமயமான சரீரம்'' என்றார்.

அப்போது கோபாலனின் அன்னை சலனமின்றி நின்றார். ஸ்ரீராமகிருஷ்ணர் இவருடைய பாதங்களைத் தொட்டபோதும் ஒருவித மாற்றமுமில்லை. பிறகு அறையில் எத்தனை நல்ல தின்பண்டங்கள் உண்டோ அத்தனையும் கொணர்ந்து ஸ்ரீராமகிருஷ்ணர் இவருக்கு ஊட்டிவிடத் தொடங்கினார்.

கோபாலனின் அன்னை தட்சிணேசுவரம் செல்லும்போதெல்லாம் இவ்வாறு இவருக்கு உணவளிப்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் வழக்கமாக இருந்தது. ஒரு நாள் அகோரமணி, ''கோபால்! நீ எனக்கு இத்தனை உணவளிப்பதில் உனக்கு என்ன மகிழ்ச்சி?'' என்று கேட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ''முன்பெல்லாம் நீ எனக்கு எத்தனை ஆகாரமளித்திருக்கிறாய்?'' என்று பதிலளித்தார்.

அகோரமணி, ''முன்பு எப்போது?'' என்றார். ஸ்ரீராமகிருஷ்ணர், ''ஜன்மாந்தரத்தில்'' என்றார். குறிப்பிட்ட அன்று முழுவதும் தட்சிணேசுவரத்திலேயே அகோரமணி தங்கினார். மாலையில் இவர் காமார்ஹாடி செல்லப் புறப்பட்டபோது, ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்கள் கொண்டு வந்த திண்பண்டம் அனைத்தையும் அவருக்குக் கொடுத்தார்.



கோபாலனின் அன்னை அவற்றை வாங்கிக் கொள்ள மறுத்தபோது ஸ்ரீராமகிருஷ்ணர், இவருடைய மோவாயைப் பிடித்து அன்போடு, ''முன்பு வெல்லமாக இருந்தாய். அதன்பின் சர்க்கரையாக ஆனாய். அதன்பின் இனிப்புத் தின்பண்டமாக ஆகிவிட்டாய். இப்போது நீ இனிப்புப் பண்டம் அல்லவா?'' என்று கூறி அவற்றை ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

கோபாலனின் அன்னையின் நடவடிக்கைகளை ஸ்ரீராமகிருஷ்ணர் கூர்மையாகக் கவனித்து வந்தார் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பலராம

போஸ் வீட்டில் நாம் முன்பு கூறிய நிகழ்ச்சிக்குப் பின், ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு படகில் ஏறித் தட்சிணேசுவரம் செல்லப் புறப்பட்டபோது அதே படகில் சில சிறுவர்களும் கோலாப்மாவும் கோபாலனின் அன்னையும் ஒரு பெரிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஏறினர்.

கோபாலனின் அன்னையின் வறுமை நிலையை அறிந்துகொண்டு பலராம் பாபுவின் குடும்பத்தினர் துணிமணிகள் முதலிய சில பொருள்களைக் கொடுத்திருந்தனர். சற்று முன்வரை கோபாலனின் அன்னையுடன் மிகுந்த அன்போடு பழகிய அதே ஸ்ரீராம கிருஷ்ணர் இந்த மூட்டையைக் கண்டதும் ஏதோ அன்னியரைப் போல அகோரமணியிடம் நடந்துகொண்டார். அவரது அன்பு வெள்ளம் தடைப்பட்டு வேறு திசையில் திரும்பிவிட்டது.

கோபாலனின் அன்னையோடு குருதேவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அந்த மூட்டையைப் பார்த்தவண்ணம் ஸ்ரீராம கிருஷ்ணர் மற்றவர்களிடம் வைராக்கியத்தைப் பற்றி விமரிசிக்க ஆரம்பித்தார். இவற்றையெல்லாம் கண்ட கோபாலனின் அன்னை மனதிற்குள்ளாகவே மிகவும் கலங்கிப் போனார். அந்த மூட்டையைக் கங்கை ஜலத்தில் போட்டுவிடுவதே நல்லது என்று இவருக்குத் தோன்றியது.

அதன் பின் தட்சிணேசுவரம் போய்ச் சேர்ந்ததும் ஸ்ரீ அன்னையாரிடம், ''அம்மா! இந்தச் சாமான் மூட்டையைப் பார்த்து, கோபாலனுக்குக் கோபம் வந்துவிட்டது. இப்போது என்ன செய்வது? நான் இதையெல்லாம் எடுத்துச் செல்ல மாட்டேன். இங்கேயே போட்டுவிட்டுப் போகப் போகிறேன்'' என்றார்.

கருணைமயியான ஸ்ரீ சாரதாதேவியார் இந்த மூதாட்டியின் மனம் வருந்துவதைக் கண்டு, ''அவர் அப்படித்தான் சொல்லுவார். உனக்குக் கொடுப்பதற்கு யாருமில்லை. நீ என்ன செய்வாய்? தேவை இருக்கிறது என்றுதானே வாங்கி வந்தாய்?'' என்று கூறினார்.

எனினும் கோபாலனின் அன்னை சில பொருள்களைவிட்டுவிட்டார். மிகுந்த பயத்துடன் சில காய்கறிகளை எடுத்து ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கொடுப்பதற்காகச் சென்றார். வயதான பெண்மணி மிகவும் சங்கடப்படுவதைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ணர் தம் முகமலர்ச்சியைக் காட்டினார். அதைக் கண்டு சமாதானம் அடைந்த கோபாலனின் அன்னை காமார்ஹாடி சென்றார்.


எண்ணங்களால் புரிந்துகொள்ள முடியாத ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு நாள் அகோரமணியிடம், இவருக்குக் கிடைக்கும் கோபால தரிசனங்களைப்பற்றி நரேந்திரனிடம் கூறும் படிச் சொன்னார். இதற்கு முன்பு பகவத் தரிசனம் கிடைத்தபோதெல்லாம் கோபாலனின் அன்னை அவற்றை அப்படியே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சொல்லியிருந்தார். அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர், 'இவைபற்றி எவரிடமும் கூற வேண்டாம்' என்றும், 'கூறினால் இத்தகைய காட்சிகள் மீண்டும் கிடைக்க மாட்டா' என்றும் எச்சரிக்கை செய்திருந்தார்.

அதனால் கோபாலனின் அன்னை இன்று அவரிடமிருந்து நேர் எதிரிடையான உத்தரவு கிடைத்தபோது, ''இதனால் ஒரு கெடுதியும் நேரிடாது அல்லவா, கோபாலா?'' என்று கேட்டார்.

''அவ்விதம் ஒன்றும் நேராது'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் இவரைச் சமாதானப் படுத்தினார்.

பின்பு கோபாலனின் அன்னை நரேந்திரனிடம் தமது அனுபவம் அனைத்தையும் எடுத்துக் கூறினார். இடையிடையே, ''அப்பா! நீங்கள் பண்டிதர், புத்திமான்கள். நானோ ஏழைப் பிச்சைக்காரி. எனக்கு ஒன்றும் தெரியாது. புரிந்துகொள்ளவும் இயலாது. நீங்கள் சொல்லுங்கள். இதெல்லாம் பொய் அல்லவே?'' என்று கூறுவார்.

மூதாட்டியின் பக்தி, பிரேமை, பாவநிலையில் கிடைத்த தரிசனங்கள் இவற்றையெல்லாம் கேட்ட நரேந்திரரால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே இயலவில்லை. நீர் நிறைந்த கண்களுடன், ''இல்லையம்மா. நீ கண்டதெல்லாம் மெய்யேதான்'' என்று பதில் கூறினார். ○



கார்த்திகை தீபம்

ராஜம் ஜயராமன்

கார்த்திகை தீபம் பண்டைக் காலம் முதலே நம் நாட்டில் நடந்து வரும் திருவிழாவாகும். இந்த விளக்கிடும் விழாவைப்பற்றி ஞானசம்பந்த பெருமான் பூம்பாவைப் பதிகத்தில்,

துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்
கார்த்திகைநாள்
தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ
பூம்பாவாய்!

என்று மயிலைக் கபாலீச்சுரர் கோயிலில் நடக்கும் தீபவிழாவைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதில் விளக்கீடு நாளை, 'தொல் கார்த்திகை நாள்' என்று சிறப்பித்துக் கூறுகிறார். இதிலிருந்து இந்த விழாவின் தொன்மையையும் சிறப்பையும் அறியலாம்.

இந்த விழா கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்தில் இருக்கும்போது தீபத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. ஜோதி சொரூபமாய், அருட்பெருஞ் ஜோதியாய் இறைவனை வழிபடுவதே இந்த விழாவின் சிறப்பாகும்.

கார்த்திகை தீபம் என்று கூறும்போதே அனைவருக்கும் கவனத்திற்கு வருவது திருவண்ணாமலையில் நடைபெறும் 'கார்த்திகை தீபப் பெருவிழா'தான். ஏனெனில், இந்தத் தீப விழாவிற்கும் அண்ணாமலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தத் தலத்தில்தான் இறைவன் சோதிவடிவாக நின்று ஆன்மகோடிகளுக்கு அருள் பாலிக்கிறான்.

புராண வரலாறு

ஒரு சமயம் பிரம்மாவும் திருமாலும் தமக்குள் யார் பெரியவர் என்று வாதிட்டுக் கொண்டனர். இருவரும் சிவபெருமானிடம் சென்று தீர்ப்பைக் கூறும்படி கேட்டுக் கொண்டனர். பெருமான் இவர்கள் செருக்கினை அடக்கியருள எண்ணம் கொண்டு அவர்கள் இடையில் அகண்ட சோதி வடிவாய்த் தோன்றி, ''இந்தச் சோதியின் அடிமுடியை யார் முதலில் காண்கின்றனரோ அவரே பெரியவர்'' என்று அருளினார்.

இருவரும் இதற்கு இசைந்து, பிரம்மா முடியைக் காணவும், திருமால் அடியைக் காணவும் புறப்பட்டனர். பிரம்மா அன்னமாக மாறி முடியைத் தேடிச் சென்றார். திருமால் வராகமாக மாறி, பூமியைத் தோண்டி இறைவனின் அடியைக் காணச் சென்றார்.

பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் இறைவனைக் காண முடியாமல் இருவரும் வெட்கமுற்றுத் திரும்பினர்.

இந்தக் கதையில் உள்ள நுட்பமான தத்துவம் அனைவராலும் உணர்ந்து உய்வதற்கு ஏற்றது. கல்விக்கு அதிதேவதையான கலைமகளின் தலைவன் பிரம்மா. செல்வத்திற்கு அதிதேவதையான திருமகளின் தலைவன் திருமால். இவ்விருவரும் கல்விச் செருக்காலும் செல்வச் செருக்காலும் இறைவனின் அடிமுடியைக் காண முயன்றனர். ஆனால் தோல்வியுற்றனர். அன்பின் ஆற்றலால்தான் இறைவனைக் காண முடியும் என உணர்ந்து வெட்கமுற்றனர்.

மேலும், இறைவனின் திருவருளாகிய அடியையும் சிவஞானமாகிய முடியையும் கண்டு திருவருளின் துணையால் சிவஞானம் பெறலாம் என்றே அவ்விருவரும் அடிமுடி தேடி அலைந்தனர். ஆயினும் யான், எனது என்ற செருக்குற்றதனால் காண முடியாமல் தோற்றனர்.

. பசுஞானமோ பாசஞானமோ இறைவனைக் காட்டாது. பதிஞானம் ஒன்றே இறைவனைக் காண உதவும் என்பதை அவ்விருவரும்

உணர்ந்து, ஆணவமழனைப்பு நீங்கி, தங்கள் அறியாமைக்கு வெட்கமுற்று, சோதியாய் நின்ற இறைவனைத் துதித்து நின்றனர்.

அப்போது அவர்களிடம் பெருங்கருணை கொண்டு ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாய் நின்ற இறைவன், இலிங்கோற்பவ மூர்த்தியாக அவர்களுக்குக் காட்சி அளித்தருளினார். அந்த இடமே அண்ணாமலை, அருணாசலம், சோணகிரி என்று வழங்கப்பெறும் திருவண்ணாமலை யாகும்.

இந்தத் தலம் பஞ்சபூதத் தலங்களுள் தேயுத் (அக்கினி) தலமாக விளங்குகிறது. இந்த மலை கிருத யுகத்தில் அக்கினி மலை யாகவும், திரேதா யுகத்தில் ரத்தின மலை யாகவும், துவாபர யுகத்தில் தாமிர மலையாகவும் இருந்து, இப்போது கலி யுகத் தில் கல்மலையாக மாறியுள்ளதாக அருணாசல புராணம் கூறும்.

இறைவன் சோதிவடிவில் அருணாசலத்தில் காட்சி கொடுத்த நாளையே திருக் கார்த்திகை விழாவாக அங்கு இன்றும் சிறப் பாகக் கொண்டாடி வருகின்றனர். இந்தத் தினத்தையே மற்ற ஆலயங்களிலும், சொக்கப்பனை கொளுத்தியும் தீபமேற்றியும் விளக்கீடு விழாவாகக் கொண்டாடி வருகின் றனர்.

மேலும், கார்த்திகை நாள் முருகனுக்கு உகந்த நாளுமாகும். சரவணப் பொய்கை யில் உதித்த முருகனைக் கார்த்திகைப் பெண்கள் அறுவர் எடுத்துப் பாலூட்டி வளர்த்ததனால் அவர்களுக்கு உரிய இந்த நாளில் முருகனை வழிபடுவோருக்கு இறைவன் பேரின்ப வாழ்வைத் தருவதாக வரமளித்தார். கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனால் முருகனுக்குக் கார்த்திகேயன் என ஒரு பெயரும் உண்டு.

முருகனுக்கும் சிவபெருமானுக்கும் உரிய இந்தக் கார்த்திகைநாளில் அனைவரும் விரதம் இருந்து இறைவனை வழிபட்டால் அவன் நமது ஆணவ இருளை நீக்கிப் பேரொளிப் பிழம்பாய்க் காட்சி தருவான். ○

அதிகக் கோபம் கொண்டவர்களுக்கு, தன்னைச் சார்ந்தவன் அன்னியன் என்ற வேறுபாடே கிடையாது. உதாரணமாக, நெருப்பு, நெய் முதலியன ஊற்றி ஹோமம் செய்தவனையும் தொட்ட மாத்திரத்திலேயே சுடுகிறது.

—பர்த்ருஹரியின் நீதிசதகம்

பிரமன், அதிகம் பணக்காரனாக இருக்க வேண்டும் என்றும், குறைந்த செல்வம் உடையவனாக இருக்க வேண்டும் என்றும் ஒவ்வொருவன் தலையிலும் எழுதுகிறான். அதைப் பின்பற்றியே மனிதன் பாலைவனத்தில் இருந்தாலும், மேருமலையின் சிகரத்தில் இருந்தாலும் அதிகமான செல்வத்தையோ, குறைந்த செல்வத்தையோ பெறுகிறான். ஆகையால், மனிதனே! அன்று அவன் எழுதியபடியே கிடைக்கும் என்று தைரியம் கொண்டு வாழ்வாயாக. பொருளை வேண்டிப் பணக்காரன் முன்னிலையில் நின்று பல்லை இளித்துத் தாழ் நிலையைக் காட்டிக்கொள்ளாதே. சிறு குடம் கிணற்றில் விட்டாலும், கடலில் இட்டாலும் ஒரே அளவான நீரைத்தானே தன்னிடம் கொள்கிறது? அது போல் மனிதன் தன் விதிப்படியே எங்கே சென்றாலும் ஒரே மாதிரியான பலனையே பெறுவான்.

—பர்த்ருஹரியின் நீதிசதகம்

ஆன்மிக உரையாடல்

ஜூலை — 6

ஸ்வாமி துரியானந்தர் வராந்தாவில் அமர்ந்திருந்தார். பிரம்மசாரிகளும் சன்னியாசிகளும் அவரைச் சூழ்ந்திருந்தனர்.

சுவாமி துரியானந்தர்—ஒருவன் எத்தனை தீய மனப்போக்குகளோடு வந்தாலும் அவன் சத்சங்கத்தில் இருந்தால் அபிவிருத்தி காண்பது உறுதி. நீ ஓர் அத்தர் கடைக்குப் போனால், உனக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும், உன் நாசித்துவாரத்தில் மணம் புகுவது போலத்தான் இது. சத்புருஷர்களுடன் சேர்ந்திருப்பதில் மக்களுக்கு அநேகமாக விருப்பமில்லாமலே இருக்கிறது. சிலருக்கே சத்புருஷர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணர் பேசிக்கொண்டிருப்பார், பக்தர்கள் கேட்டுக்கொண்டிருப்பர். ஆனால் அவர்களோடு வந்த நண்பர்கள், ‘‘சரி, நாம் போகலாமே! எத்தனை நேரம் நீ கேட்டுக்கொண்டேயிருப்பாய்?’’ என்று கிசுகிசுப்பார்கள். பக்தர்களுக்குக் கிளம்ப விருப்பம் இருக்காதுதான். நண்பர்கள் அடியோடு சலிப்புற்று, ‘‘அப்படியானால் நீங்கள் இங்கேயே இருங்கள். நாங்கள் போய்ப் படகில் காத்திருக்கிறோம்’’ என்பார்கள். இதையெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணர் எத்தனை அழகாய் வர்ணிப்பார்!

சத்சங்கம் நல்விளைவுகளை ஏற்படுத்தியே தீரும். உயிருள்ளதுதான் உயிர்ச்சக்தியை இன்னொன்றுக்கு அளிக்க முடியும். வட்ட வடிவமாக இல்லாத எதுவும் வட்டமான நிழலை உண்டாக்க முடியாது. எழுத்தைவிட உயிர்ச்சக்தியே (ஒரு தத்துவத்தை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதே) மிகவும் அதிகமாகச் செய்ய முடியும். படிப்பதற்கும் ஒரு சொற்பொழிவைக் கேட்பதற்குமிடையே எத்தனை மகத்தான வேறுபாடு இருக்கிறது? எழுதுவதிலும்கூட எவ்வளவுக்கு அதிகமாக ஒருவர் வாழ்வுச் சக்தியை அதில் ஊட்டுகிறாரோ, அவ்வளவுக்கு அதன் பயனும் அதிகச் சக்தி பெறுகிறது. சுவாமிஜி எழுதியவற்றைப் பாருங்கள், மற்ற சுவாமிகளுடையவற்றையும் பாருங்கள். ஒருவரின் உள்வடிவமே பிரதானமான விஷயமாகும். விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்தாம் இந்த உலகை இயக்கிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் ஆட்டு மந்தை போல் பின் செல்கிறார்கள். உலகம் முழுவதும் பிரயாணம் செய்து திரும்பிய சுவாமிஜி சொன்னார், ‘‘ஜனநாயகம் என்பது ஒரு கட்டுக்கதை. எல்லா இடங்களிலும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்தாம் ஆட்சி நடத்துகிறார்கள்’’ என்று.

ஒரு தேசம் தனக்குத் தேவைப்படும் பணிக்கு உரிய சரியான மனிதர்களை உற்பத்தி செய்யத் தவறும்போது அந்தத் தேசம் அழிவு நோக்கிப் போகிறது. நம்முடையது சமய உணர்வு கொண்ட நாடு. இதுவரையிலும் எல்லாக் காலங்களிலும் நமது பாரதத் தாய் மகான்களைப் படைத்து வந்திருக்கிறாள். தனது வரலாற்றில் அவள் இதில் எந்தக் காலகட்டத்திலாவது தவறியிருந்தால் எனக்குக் காட்டுங்கள். ஒரு தனி மனிதரின் வாழ்க்கை ஆயிரமாயிரம் மக்களை ஊக்கிச் செயற்பட வைத்திருக்கிறது. அதுவும் பல நூற்றாண்டுகளுக்கு! நானக்கைப் பாருங்கள். கபீரைப் பாருங்கள். தேசத்தின் இந்தப் பகுதியை (உத்தரப் பிரதேசத்தை) எத்தனை காலமாகத் துளசிதாசர் ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிறார், பாருங்கள்.

அண்மையில் கைம்மையுற்ற ஓர் அம்மாள் இன்று என்னிடம் வந்தார்.

அவரிடம் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசினேன். அவரது உறவினர்கள் சுவாமி பிரேமானந்தரைத் தங்கள் ஊருக்கு அழைத்திருக்கிறார்கள். அவரது கணவரின் சகோதரர் பட்டதாரி. தமது கிராமத்தில் அவர் ஒரு பள்ளி நடத்துகிறார். ஊதியமில்லாமல் ஊழியம் செய்கிறார். இதே ரீதியில் தேசத்தில் ஒரு புதிய உணர்வு பிறந்திருக்கிறது. அது முழுமை பெறுவதற்கு நிறையக் காலம் பிடிக்கும் என்பது உண்மை. ஆனால் நாடெங்கிலும் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதில் ஐயத்துக்கிடமில்லை. இன்று நாம் மக்களின் பேச்சில் காணும் தைரியம் முன்னாட்களில் இல்லை. ○

செய்திகள்

□ நாட்டறம்பள்ளி, ஸ்ரீராமகிருஷ்ண மடம் மருத்துவமனையில் செப்டம்பர் 10, 11 ஆகிய இரு நாட்களில் சென்னை டாக்டர்களால் பல் மருத்துவ முகாமும், பொது மருத்துவ முகாமும் நடைபெற்றன. பல் மருத்துவ முகாம் மூலம் 693 பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் சிகிச்சை பெற்றனர். பொது மருத்துவ முகாம் மூலம் 830 பேர் பயன் அடைந்தனர்.

□ சென்னை, சேத்துப்பட்டிலுள்ள புல்லாபுரம் அரிஜன காலனியில் செப்டம்பர் 26–ஆம் நாள் இரவு 6-30க்கு ஹிந்து இளைஞர்களால் நடத்தப்பெற்ற பொதுக்கூட்டத்தில் 'ஹிந்துமதமும் விக்கிரக வழிபாடும்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தரும், பேராசிரியர் ஏ. சுப்ரமண்யமும் உரையாற்றினர்.

□ பெரம்பூர், அன்னதான சமாஜத்தில் செப்டம்பர் 27-ஆம் நாள் ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கத்தின் சார்பாக 'ஸ்ரீராமகிருஷ்ணர் விழா' விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. அன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை விசேஷ பூஜையும் பக்திப் பாடல்களும் இடம் பெற்றன. மாலை 5 மணிக்குத் துவங்கிய பொதுக்கூட்டத்திற்கு சுவாமி தபஸ்யானந்தர் தலைமை வகித்துத் தலைமையுரை வழங்கினார். சுவாமி கமலாத்மானந்தர், எஸ். பாலசுந்தரம், ஆர். நரசிம்மன் ஆகியோர் உரையாற்றினர். கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ மாணவியருக்குச் சுழற்கேடயமும் பரிசுகளும் வழங்கப்பட்டன. அன்று இரவு 'சுவாமி விவேகானந்தரின் வரலாறு' என்ற தலைப்பில் குமாரி கௌரியின் ஹரிகதா கலாட்சேபம் சிறப்பாக நடந்தேறியது.

□ மயிலை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லத்தின் நவராத்திரி விழா நிகழ்ச்சிகளை 29—9—81 ஆம் நாள் மாலை 4-30 மணிக்கு ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜி மகராஜ் அவர்கள் துவக்கி வைத்தார். 29—9—81 முதல் 8—10—81 வரை நடைபெற்ற நவராத்திரி நிகழ்ச்சிகளில் நாள்தோறும் லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, சொற்பொழிவுகள், இன்னிசைக் கச்சேரிகள் ஆகியவை இடம் பெற்றன.

□ தி. நகர், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமத்தின் சார்பாக 29—9—81 முதல் 8—10—81 வரை கிரிபித் ரோடு மிஷன் பள்ளியின் பிரார்த்தனைக் கூடத்தில் நவராத்திரி விழா கொண்டாடப்பெற்றது. நாள்தோறும் மாலை 6-30 முதல் 8-30 வரை சங்கீதக் கச்சேரி, இன்னிசைச் சொற்பொழிவு, வில்லுப்பாட்டு, பக்திப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளுடன் பொம்மைக் கொலுவும் இடம் பெற்றிருந்தது.

□ நாட்டறம்பள்ளியில் சுவாமி சர்வக்ஞானந்தர், சுவாமி குமாரானந்தர் ஆகியோரின் முன்னிலையில் 8—10—81 ஆம் நாள் காலை 9-30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் துவக்க விழா நடைபெற்றது. இந்த மன்றம் விரைவில் ஒரு நர்சரிப் பள்ளியைத் துவக்க முடிவு செய்துள்ளது.

☐ இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பாக 8—10—81 ஆம் நாள் மயிலை ஏ. வி. எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் காலை 7-30 மணிக்கு நா. கிரிதாரி பிரசாத் கீதைச் சொற்பொழிவாற்றினர். இந் நிகழ்ச் சிக்கு சுவாமி தன்மயானந்தர் தலைமை வகித்துத் தலைமையுரை வழங்கினர். அன்று காலை 10-30 மணிக்கு, திருச்சூர் ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் கிளையைச் சேர்ந்த சுவாமி சக்கியானந்தர் இயற்றிய 'நம் சென்ற காலத்து வரலாற்றுச் சிறப்புகள்' என்ற நூலை இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பாக கல்வி அமைச்சர் அரங்கநாயகம் வெளியிட்டார்.

☐ விழுப்புரம், ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கம் 4—10—81 ஆம் நாள் காலை 10 மணிக்குத் தனது முதலாமாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது. பொதுக் கூட்டத்தில் சுவாமி தன்மயானந்தர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.

☐ மயிலை, ஸ்ரீ ரா ம கி ரு ஷ் ண மிஷன் மாணவரில்லத்தில் 8—10—81 மாலை 5 மணிக்கு 'ஸ்ரீசாரதாதேவியாரின் வாழ்வும் வாக்கும்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத் மானந்தர் உரை நிகழ்த்தினர்.

☐ நெய்வேலியில் ஸ்ரீராமகிருஷ்ண—விவே கானந்த பக்தர்களால் 9—10—81 மாலை 6-30 மணிக்கு 'ஸ்ரீராமகிருஷ்ண சமாஜம்' என்ற அமைப்புத் துவக்கப்பட்டது. துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் சுவாமி ராகவே சானந்தர் சிறப்புரை ஆற்றினர்.

☐ சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீகாமாட்சி அம்மன் கோவிலில் 9—10—81 இரவு 7-30 மணிக்கு சுவாமி கமலாத்மானந் தரின் ஆன்மிகச் சொற்பொழிவு நடை பெற்றது.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிவாரணப் பணிகள்

ஒரிஸ்ஸா மாநிலத்தைச் சேர்ந்த சாக் கம்பா, அந்தார்ஜ்ஹுலி ஆகிய இடங் களிலும், ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த மதனபுரத்திலும் வெள்ளத்தினல் பாதிக்கப் பட்டோருக்கு வீடுகள் கட்டித்தரும் பணியை மிஷன் தொடர்ந்து நடத்தி வருகிறது.

மேற்கு வங்காளத்தைச் சார்ந்த மால் தாவில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டோ ருக்கு 1,800 (Semi Pacca houses) வீடுகளைக் கட்டித் தரும் பணியை மிஷன் துவக்கி யுள்ளது. ஒரு வீட்டைக் கட்டுவதற்கு ரூ. 1,500 செலவாகும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

இவை தவிர, கடந்த இதழில் குறிப்பிட்டி ருந்த நிவாரண வேலைகளையும் மிஷன் தொடர்ந்து நடத்தி வருகிறது.

ரா, ம என்ற எழுத்துக்கள் பக்தியின் சாராம்சம். இந்த இரண்டு எழுத்துக்களும் இனியவை; எழில் பொருந்தியவை; பக்தர்களின் உள்ளத்தை ஊடுருவி அவர்களின் விருப்பத்தை அறிந்துகொள்பவை; நினைக்க எளிமையானவை; இன்பமளிப்பவை; இந்த உலகில் நன்மை தந்து, விண்ணுலகில் சமாளிக்க உதவுகின்றன.

—துளசி ராமாயணம்

ரா, ம என்ற எழுத்துக்கள் சொல்லவும் கேட்கவும் நினைக்கவும் இனியவை. ராம— லட்சுமணன் மீது தனக்கு எவ்வளவு அன்போ, அதே அளவு அன்பைத் துளசி இந்த இரண்டு எழுத்துக்கள் மீது வைத்துள்ளார். இவற்றைப் பிரித்துத் தனித்தனியாக வர்ணிக்க முடியும். எனினும் இவை பரமாத்மா—ஜீவாத்மா போல் இணைபிரியாதவை.

—துளசி ராமாயணம்

பெரிய முட்டாள்

ஓர் ஊரில் பெரிய பணக்காரர் இருந்தார். அவர் கல்வியிலும் பெரியவராக இருந்தார். அவருடைய வேலைக்காரன் எழுதப் படிக்கத் தெரியாத பட்டிக்காட்டான். கல்விச் செருக்கும் பணச்செருக்கும் கொண்ட முதலாளி பாமரனைக் கேலி செய்வது வழக்கம். ஒரு நாள் ஒரு கைத் தடியைக் கொடுத்து, அவனைவிட முட்டாளைப் பார்த்தால் அதைக் கொடுக்கும்படி சொன்னார். அடிக்கடி, ''தடி என்ன ஆயிற்று?'' என்று கேட்டுக் கொள்வார்.

சில நாட்கள் சென்றன. முதலாளி மரணப் படுக்கையில் விழுந்தார். வேதனை தாளாமல் வருந்திக் கொண்டிருந்தார். வேலைக்காரன் முதலாளியை அணுகி, ''ஐயா, என்ன இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

முதலாளி திக்கித் திணறி, ''அப்பா, நான் யாத்திரை போகப் போகிறேன்'' என்றார்.

வேலைக்காரன், ''எங்கே யாத்திரை போகப் போகிறீர்கள்? பெட்டி படுக்கை யெல்லாம் தயார் செய்யட்டுமா?'' எனக் கேட்டான்.

முதலாளி, ''நான் போகும் இடத்திற்கு இது ஒன்றும் உதவாது. பகவானைப் பற்றிச் சிந்தித்து நல்வாழ்வு வாழ்ந்திருந்தால் அது மட்டும் கூட வரும். அப்படி ஒன்றும் சேர்த்து வைக்கவில்லையே'' என வருந்தினார்.

''ஆகா! போகும் இடத்திற்குப் பயனில்லாத பொருளைத் தேடி வைத்துள்ள நீங்கள் என்னைவிடப் பெரிய முட்டாள். இதோ, இந்த, தடியைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றான் வேலைக்காரன்.

பிறகு, ''கடைசி நேரத்தில் இறைவனது திருநாமத்தைச் சொன்னால் நற்கதி கிடைக்கும் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே நாராயண என்று கூறுங்கள்'' என்று சொல்லித் தானும் சேர்ந்து நாமஜபம் செய்தான்.

முதலாளியின் ஆத்மா சாந்தியடைந்தது.

—த. காவேரி

ஊழ்வினை தீர வழி

ஆகாயத்திலிருந்து பெய்த மழை கடலில் சேர்வது போல, நாம் பகவானின் நாமத்தை ஸ்மரிப்பதனால் நமது மனம் அவர் உருவத்தின் மூலம் அவரைச் சாரும். அவரது அனுக்கிரகம் கிடைக்கும்.

புண்ணிய ஸ்தல தீர்த்தங்களிலெல்லாம் கால் பட்டாலே போதும், புண்ணியம் சேர்ந்து பாவம் கழியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த வாழ்நாளில் மேலும் பாவம் செய்யாமல் புண்ணியத்தைச் செய்தால், அது அடுத்த ஜன்மத்திற்கு நல்வினையாக நம் துணையாக வரும்.

நம்மிடத்தில் இருக்கும் ஊழ்வினை கழிந்த பின்புதான் நமது கடன் தீர்ந்து நமது வாழ்க்கை தெய்வத்துக்கு உகந்ததாக இருக்கும். அவன் அனுக்கிரகமும் கிடைக்கும்.

—ஞானானந்தர்

வேறு நிலை வேண்டாம்

கி. வா. ஜகந்நாதன்

காரைக்காலம்மையாரை மணந்த கணவன் அவருடைய தெய்விகத் தன்மையை அறிந்து, அவரை மனைவியாகக் கொண்டு வாழ்வது தவறு என்று உணர்ந்து மதுரைக்குச் சென்று வேறொரு பெண் மணியை மணந்து கொண்டு வாழ்ந்தான். அந்த மனைவிக்குப் பிறந்த பெண் குழந்தைக்குக் காரைக்கால் அம்மையாரின் இயற் பெயராகிய புனிதவதி என்பதையே வைத்தான்.

கணவன் பிரிந்த பிறகு சுற்றத்தாருடன் அவனைத் தேடிச் சென்று அடைந்தபோது அவன் அம்மையாரை வணங்கினான்.

அதைக் கண்ட அம்மையார் அச்சத்தோடு ஒதுங்கி நின்றார். சுற்றத்தார் அவனிடம், ''உன் மனைவியை வணங்குவது ஏன்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன், ''இவர் மானிடப் பிறவி அல்லர், தெய்வத் தன்மை உடையவர். இதை அறிந்து, இவரை மனைவியாகக் கொண்டு வாழ்தல் தகாது என்று இங்கே வந்து வேறு திருமணம் செய்து கொண்டேன். இங்கே பிறந்த பெண் குழந்தைக்கு இவருடைய பெயரை வைத்தேன். நீங்களும் இவரைப் பணியுங்கள்'' என்றான்.

கணவராக மணந்த அவன் அவ்வாறு சொல்லவே, அம்மையார், ''இவனுக்காகத் தாங்கிய இந்த அழகுடைய உடம்பைப் போக்கித் தசையற்ற பேய் வடிவத்தை அருள வேண்டும்'' என்று இறைவனை வேண்டினார். இறைவன் அவ்வாறே அருள் புரிய அவர் பேய் வடிவம் கொண்டு நின்றார். அந்த நிலையில் அவர் பாடியது அற்புதத் திருவந்தாதி.



சிவபெருமானைச் சுற்றிப் பேய்க்கணங்கள் இருக்கும். காரைக்காலம்மையாரும் அந்தக் கணங்களில் ஒன்றாகி விட்டார்.

தாம் பேயானதை அவரே சொல்கிறார். 'சிவபெருமானுடைய நல்ல பேய்க் கணங்களில் ஒன்றான நாம்' என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்.

பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்.

இறைவன் இரண்டு கண்களுக்குமேல் நெற்றியில் ஒரு கண்ணை வைத்தவன்.

ஒரு சுலோகம்

விபதோ நைவ விபத: ஸம்பதோ நைவ ஸம்பத: |
விபத் விஸ்மரணம் விஷ்ணோ: ஸம்பத் நாராயணஸ்மிருதி: ||

விபத்துக்கள் யாவும் விபத்துக்களல்ல, செல்வங்களும் செல்வங்களல்ல. ஹரியை மறப்பதே விபத்து; எப்போதும் நினைப்பதே செல்வம்.

இறைவனோடு இரண்டறக்கலக்கும் நிலை அது, அதுதானே யாவரும் பெற வேண்டியது?''

அந்தக் கண்ணை எப்போதும் திறந்திருக்க மாட்டான். யாருக்கேனும் தன் ஆற்றலை சிறிது உணர்த்த வேண்டுமானால் அப்போது அதைத் திறந்து காட்டுவான். நக்கீரரோடு வாதிட்டபோது அதைச் சிறிதே திறந்து காட்டினான். மன்மதன் மலரம்புகளை விட்ட போது சிறிது அந்தக் கண்ணை விழித்துப் பார்த்தான். ஆகவே, தன் நெற்றியின் மேல் அந்தக்கண் இருப்பதை சிறிதளவே உணர்த்தி, வைத்திருக்கிறான்.

சிறிது உணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்.

அவனுடைய பேயக்கணத்தில் ஒன்றாக இருக்கிறார் அம்மையார்.

''இந்த நிலையில் எவ்வளவு காலம் இருக்கப் போகிறீர்கள்?'' என்று நாம் கேட்கிறோம்.

''ஏன்? இந்த நிலையே பெரிய நிலை அல்லவா? சிவபெருமானுடைய நல்ல கணத்தில் ஒரு பேயாக இருக்கும் பேறு பெறற்கு அரியதல்லவா?''

''இந்த நிலை எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்? இது மாறினாலும் மாறலாமே! அப்போது என்ன செய்வீர்கள்?''

''என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

''பேரின்ப வாழ்வு ஒன்று இருக்கிறதே!

''இந்த நிலை எமக்குத் தங்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றி எமக்குக் கவலை இல்லை. இறைவனுடைய திருவுள்ளம் எப்படியோ அப்படியே நடக்கட்டும். வேறு நிலையே எமக்கு வேண்டாம்.

வேண்டேம், நமக்கு ஈது
உறினும் உருதொழியு மேனும்.

''இறைவனுடைய திருவருளினால் சாலோக சாமீப சாரூப சாயுஜ்ய நிலைகளெல்லாம் கிடைக்குமே! அவற்றை விட்டு விட்டு இந்தப் பேயுருவத்தோடு இருப்பானேன்?''

''வேறு எதைப் பெற்றாலும் அதை யாம் வேண்டோம். இந்த நிலையே போதும். அவனடிக் கீழிருந்து அவனுடைய நடனத்தைத் தரிசித்து இன்புறுவதைவிட வேறு

அறவே ஆசையை விட்டொழித்து ஸ்வதர்மங்களைத் திருந்தச் செய்வதே முக்தர் கண்ட வழியாகும்.
— ஒரு சாது

நீரில் குமிழிகள் போல், உலக சிருஷ்டியும், இருப்பும், அழிவும் காரணப்பொருளான பரமேசுவரனிடத்தில் தோன்றுகின்றன.
—ஸ்ரீசங்கரர்

உன் ஒளியை உணர்ந்தாலன்றி மக்களின் மயக்க இருள் ஒழியாது; பிறவிக்கடல் கடந்து பேரின்ப நிலையைப் பெறுவதும் சாத்தியமில்லை.
—ஞானானந்தர்

சூரியன் எங்கும் பிரகாசித்தாலும் கண்ணாடியில் மட்டும் அவனது உருவம் பிரதிபலிக்கிறது. அதுபோல் ஆத்மா எங்கும் நிறைந்தவனாயினும் நிர்மலமாக இருக்கும் புத்தியில் பிரதிபலிக்கிறது.
—ஸ்ரீசங்கரர்

நல்லோர் பிறர் தூண்டுதல் இல்லாமலே தாங்களே பிறர் நன்மையில் ஈடுபாடு கொள்வார்கள். உதாரணமாக, கதிரவன் தானே தாமரையோடையை மலரச் செய்கிறான். சந்திரன் தானாகவே ஆம்பல்மலர்களை மலரச் செய்கிறான். பிறர் வேண்டாமலே மேகம் நீரைப் பொழிகிறது.
—பர்த்ருஹரியின் நீதிசதகம்

ஒன்று எமக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.''

''இறைவனோடு ஒன்றும் நிலை மிகச் சிறந்த தாயிற்றே! நீங்கள் விரும்பினால் இறைவன் அருளால் பெறலாமே!''

''அப்படிப் பெற்றாலும் யாம் அதை வேண் டோம்.''

பெறினும் பிறிதியாதும் வேண்டேம்.

திருவாலங்காட்டில் நடராசப் பெருமான் திருவடிக்கீழ்ப் பேய் வடிவோடு என்றும் இருக்கிறார் அம்மையார். அந்த நிலை யிலேயே இணையற்ற இன்பம் கண்டு,

''கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

என்றபடி வீட்டின்பத்தையும் வேண்டாத மிடுக்கோடு அவர் இருக்கிறார். ஆதலால், ''வேறு எந்த உயர்ந்த நிலை எமக்குக் கிடைப் பதாக இருப்பினும் அது வேண்டியதில்லை. இந்த நிலையே போதும்'' என்று சொல் கிறார்.

பெறினும் பிறிதியாதும்
வேண்டேம், நமக்கு ஈது
உறினும் உறுதுஒழியு மேனும்; —
சிறிது உணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல்
வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்.

அந்வயம் : மற்றொருகண் சிறிதுணர்த்தி நெற்றிமேல் வைத்தான்றன் பேய் ஆயநற் கணத்தில் ஒன்று ஆய நாம், உறினும் உறுது ஒழியுமேனும், பிறிது யாதும் பெறினும் வேண்டேம்.

இயல்பான இரண்டு கண்களோடு மற்றும் ஒரு கண்ணைச் சில சமயங்களில் சிறிதளவு உணரச் செய்து தன் நெற்றியின் மேல் வைத் துள்ள சிவபிரானுடைய பேயாகிய நல்ல கணத்தில் ஒரு பேயாகிய நாம், இந்த நிலை எப்போதும் தங்கினாலும் தங்காமல் போய்விட் டாலும், இதனினும் சிறந்ததென்று பிறர் சொல்லும் பிறநிலை எதனையும் வேண் டோம்.

[பெறினும் என்ற உம்மை உயர்வு சிறப் பும்மை; பெறுவது அரிதென்றபடி, பிறிது யாதும் பெறினும் வேண்டேம். ஈது உறினும் உறுது ஒழியுமேனும் யாதும் வேண்டேம், பிறிது யாதும் என்பவை புணரும்போது குற்றியலுகரம் குற்றியலுகரம் ஆயிற்று. ஈது என்றது இறைவன் அடிக்கீழ் இருக்கும் நிலையை. சிறிது உணர்த்தி—சிறிதளவு ஞானத்தைப் பெறச்செய்து என்றும் பொருள் கொள்ளலாம். இயல்பான கண்கள் இருப்ப தனால் நெற்றிக்கண்ணை மற்றொரு கண் என்றார்.

நெற்றிக்கண் உடையவன் என்று சுட்டி யது, வேறு யாருக்கும் இல்லாத சிறப்புடைய வன் என்று சொன்னபடி. பேய்க்கணமாயி னும் இறைவனுடைய தொண்டில் ஈடுபடுவ தாதலின் நற்கணமாயிற்று. பேய் என்பது அஃறிணையாதலின் ஒன்று என அஃறிணை யால் சொன்னார்.]

இறைவனுக்கு ஆட்பட்டவர்களுக்கு வேறு எந்தப் பதவியும் உயர்வாகத் தோன்றாது என்பது கருத்து.

அற்புதத் திருவந்தாதியில் வரும் 86-வது பாடல் இது. □

RAMAKRISHNA-VIVEKANANDA & VEDANDA LITERATURE

SRI RAMAKRISHNA MATH
16, Ramakrishna Math Road,
MYLAPORE :: MADRAS-600 004

		Rs. P.
Sri Ramakrishna The Great Master I Vol.	Ordinary	20 00
	Deluxe	35 00
II Vol.—	Ordinary	20 00
	Deluxe	35 00
Sri Ramakrishna-A Biography		(in Press)
Sri Ramakrishna Paramahamsa		2 40
The Visions of Sri Ramakrishna		5 25
Sri Ramakrishna as Swamiji Saw Him		2 50
Sri Ramakrishna and his Mission		1 25
Sri Ramakrishna (Pictorial)		0 35
The Gospel of Sri Ramakrishna (Air mail Tissue Paper)		60 00
The Gospel of Sri Ramakrishna	Part I	30 00
	Part II	30 00
The Condensed Gospel of Sri Ramakrishna	Subsidised Edition	5 00
	Deluxe	25 00
Sayings of Sri Ramakrishna	Ordinary	8 00
	Deluxe	13 00
Tales and Parables of Sri Ramakrishna		10 00
Sri Ramakrishna Upanishad		4 50
Gems from the Gospel of Sri Ramakrishna		1 00
Sri Ramakrishna Karnamritam		4 50
Aratrika Hymns and Ramnam		2 50
The Ramakrishna Leelasthanas		1 75
Sri Sarada Devi The Holy Mother : Her Life and Conversations	Board	14 00
	Deluxe	28 00
Sri Saradadevi The Holy Mother (Life)		9 00
Sri Sarada Devi The Holy Mother (Conversations)		8 00
Holy Mother Sri Sarada Devi	Ordinary 18 00 Deluxe	35 00
Sri Sarada Devi Charita Sangraha		5 00
The Gospel of Holy mother		(In press)
Swami Vivekananda (Pictorial for Children)		2 50
Swami Vivekananda (for Students)		2 40
Swami Vivekananda : Awakener of Modern India		4 00

		Rs. P.
The Four Yogas of Swami Vivekananda Condensed and Retold		10 00
Inspired Talks	Ordinary	6 00
	Deluxe	8 00
Hinduism		2 75
Education		2 75
Vivekananda Speaks to you		1 50
Vivekananda Writes to you		1 00
Invitation to Holy Company		6 00
From Holy Wanderings to Service of God in Man		8 50
The Eternal Companion, Board		8 50
	Deluxe	14 50
Swami Ramakrishnananda, The Apostle of Sri Ramakrishna to the South		4 50
Swami Turiyananda		4 50
Nagmahasaya		3 50
The Ramakrishna Math and Mission : Its Ideals and Activities		1 50
Isavasya Upanishad		2 50
Kena Upanishad		2 50
Kathopanishad		3 00
Prasnopanishad	Ordinary	2 00
	Superior	4 00
Mundaka Upanishad		2 00
Mandukya Upanishad	Ordinary	1 25
	Superior	2 60
Aitareya Upanishad	Ordinary	2 00
	Superior	4 00
Taittriyopanishad		(in Press)
Svetasvatara Upanishad		4 00
Chandogya Upanishad	Ordinary	18 00
	Deluxe	24 00
Brihadaranyaka Upanishad	Ordinary	15 00
	Deluxe	25 00
Mahanarayana Upanishad	Board 12 00 Deluxe	17 00
Taittiriya-Mantra Kosa	(Part I)	4 00
Taittiriya-Mantra Kosa	(Part II)	4 50
Srimad Bhagavad Gita Board		11 00
	Deluxe	18 00
Srimad Bhagavad Gita	Pocket Edition	5 00
Bhagavad Gita, The Song of God		4 00
Divine Grace		5 00

Title		Rs. P.
Paths Meditation		6 50
Religious Lessons for children		2 00
The Goal and the way		19 00
Vedanta in Practice		5 00
Srimad Bhagawata Vols. I & III each		100 00
Sadhanas for Spiritual Life		5 00
Sri Ramakrishna Sahasranama Stotram		20 00
Saving challenge of Religion		28 00
Self Mastery		2 50
Reincarnation & Immortality		3 00
In the Lap of Himalayas		6 00
The Ethical Philosophy of the Gita		(in Press)
Upadesasahasri	Ordinary	10 00
	Deluxe	18 00
Atmabodha Board 7 50	Deluxe	15 00
Vakyavritti and Atmajnana Upadeshavidhi		4 00
Panchadasi of Sri Vidyaranya	Deluxe	24 00
Yatindramatadipika of Srinivasadasa Board 10 00	Deluxe	15 00
Path to Perfection		0 50
For Thinkers on Education		4 00
The Ancient Quest		2 00
Hinduism, its Meaning for the Liberation of the Spirit		(in Press)
Atman Alone Abides	Ordinary	10 00
	Deluxe	20 00
Vedic Religion and Philosophy		4 50
How to know God		(in Press)
Narayaneeyam of Sri Meppattur Narayana Bhattatiri	Ordinary	15 00
	Calico	25 00
The Devi Mahatmyam or Glory of the Divine Mother	Superior	6 00
The Narada Bhakti Sutras Ordinary 6 00	Deluxe	11 00
Narada's Way of Divine Love		5 00
The Divine Life		5 50
Universal Prayers	Ordinary	4 00
	Deluxe	11 00
Avadhuta Gita	Ordinary	8 00
Stotraratna of Sri Yamunacharya		2 75
The Spiritual Heritage of Tyagaraja		50 00
Consolafions		1 00
Adventures in Religious Life Ordinary 8 00	Deluxe	12 00
The Sermon on the Mount According to Vedanta		7 00
Gems from the Upanishads		2 25
Learn Sanskrit through Stories		(in press)
Myths & symbols in Indian civilization		14 00
Swami Vijnanananda His life & Sayings		4 00

Title		Rs. P.
Book of Daily Thoughts and Prayers		20 00
Religion and National Integration		1 00
Women of India		0 85
Service & Spirituality		10 00
Bhaja Govindam		1 00
Dakshinamurti Stotram		1 00
Yoga for Beginners		(in Press)
Meditation		6 00
Concentration & Meditation		12 00
Spiritual Life		0 20
Srimad Bhagavatam—The Wisdom of God	Board	7 50
	Deluxe	12 00
Srimad Ramayana, The Story of The Prince of Ayodhya		13 00
Sri Rama to Sri Ramakrishna Ordinary 7 00	Deluxe	18 00
Saints of India		6 00
Sri Krishna The Pastoral King Maker		2 00
God and Divine incarnations		7 00
Life of Sri Ramanuja	Ordinary	12 00
	Deluxe	22 00
Spiritual Heritage of India		22 00
Sankara Digvijaya	Ordinary	10 00
	Deluxe	20 00
The Path of Devotion		8 50
The Upanishads		9 00
The Master and the Disciple		5 50
Thus Spake Sri Ramakrishna		1 00
Thus Spake The Holy Mother		1 00
Thus Spake Vivekananda		1 00
Thus Spake Sri Rama		1 00
Thus Spake Sri Krishna		0 80
Thus Spake the Buddha		0 80
Thus Spake The Christ		0 80
Thus Spake the Prophet Mohammad		0 80
Thus Spake Sri Sankara		1 00
Thus Spake Guru Nanak		1 00
Thus Spake The Vedas		1 00
Thus Spake Zarathushtra		1 00
Gopika Gitam		1 00
Adityahridayam		1 00
Jayadeva's Dasavatara Stotra		1 00
Sri Ramakrishna Suprabhatam		1 00
Mukundamala		0 50
Bhakti Ratnavali	Ordinary	11 00
	Deluxe	21 00
Flashes from Swami Vivekananda		0 25
PurushaSuktam & Narayana Suktam		1 00
Tarka Sangraha		10 00
Four Upanishads		9 00
Yatindra Mata Dipika	Ordinary	10 00
	Deluxe	15 00